# விடுதலைப்புலிகள்

குரல்: 63 — 16-31 பங்குனி 1996 — அன்பளிப்பு: 5/-


## உள்ளே→


- ✲ சந்திரிகாவுக்கு ஒரு பதில்!
- ✲ பேரினவாதத்திற்கு ஒரு மறுப்பு
- ✲ படைதிரட்டி உடனெழுவோம்; பகையழித்து ஊர்புகுவோம்!
- ✲ கிரிக்கெட்டும் அரசியலும்
- ✲ இனப்படுகொலை எண்ணம்
- ✲ திரவப் பண நெருக்கடி


□ வடக்கிற்கான அடுத்த பாரிய படையெடுப்பு □

# பல முனைகளில் படைகள் தயார்!

# மிக விரைவில் சமர் வெடிக்கலாம்!

### மக்களைச் சிறைப்படுத்தலே நோக்கம்

**வட** பிராந்தியத்தில் நடாத்தப்படவுள்ள அடுத்தகட்டப் படையெடுப்பிற்கான பூர்வாங்கத் தயாரிப்புகள் அனைத்தையும் சிங்களப் படைகள் பூர்த்திசெய்துவிட்டன. மிக விரைவில் பல முனைகளினூடு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதி முக்கியத்துவம் நிறைந்ததாகவும், சிங்களப் படையின் சரித்திரத்தில் காணமுடியாத பெருமெடுப்பிலானதாகவும் நடத்தப்பட்ட 'சூரியப் பிரகாசம்' படையெடுப்பை விடவும், உத்தேச தாக்குதல் நடவடிக்கை, பாரிய அளவினதாய் இருக்குமென உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கூறுகின்றன.

கிழக்கிலங்கைப் போர் அரங்கில் பலத்த இழப்புக்களைச் சந்தித்துவருகின்றபோதும், தென்னிலங்கையில் பெரும் பொருளாதாரச் சரிவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள போதும், வடபுலப் போர் அரங்கில் வாகை சூடுவதற்கு சிங்கள அரசும படைத்துறையும் திடசங்கற்பம பூண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மார்ச் திங்களின் இறுதி வாரத்தில், ஜெனரல் அனுருத்த தலைமையில் கொழும்பில் கூட்டப்பட்ட - அதி இரகசியம் மிக்க - உச்சி மாநாடு ஒன்றில், உத்தேச படையெடுப்பின் சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் -


படையெடுப்பின் போர்முறைத் திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்த இறுதித் தீர்மானங்களும் எடுக்கப்பட்டுவிட்டன.

வடபிராந்திய கூட்டுநடவடிக்கைகளின் தளபதியாகப் பணியாற்றி, 'முன்னோக்கிப் பாய்தல்', 'இடிமுழக்க அடி', 'சூரியப் பிரகாசம்' ஆகிய நடவடிக்கைகளை வழிநடாத்திய மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்த தரைப்படையின் பிரதித் தளபதியாகப் பதவி உயர்த்தப்பட்டு- கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டு, உத்தேசப் படையெடுப்பிற்கான துரித தயார்ப்படுத்தல்களில் ஏற்கெனவே ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

முன்பு கிழக்குப் போர் அரங்கில் பிரதானமானதாக நிலைகொண்டிருந்ததும், பின்பு 'சூரியப் பிரகாச' நடவடிக்கையில் முக்கிய தாக்குதலணியாகப் பங்கெடுத்ததும், அதன் பின் மீண்டும் கிழக்குக் களத்துக்கு அனுப்பப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட இரண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதுமான 'SF' எனப்படும்- பிரிகேடியர் ஜானக பெரேரா தலைமையிலான - '53 ஆவது டிவிசன் சிறப்பு அதிரடிப் படையணி' (Special Force) மீண்டும் வடக்கிற்கு அனுப்பப்பட்டுவிட்டது.

'சூரியப் பிரகாச'த்தை விடவும் பிரமாண்டமான பரிமாணத்தில் தாக்குதல் நடாத்தப்படவுள்ளதால், முன்னையதை விடவும் கூடுதலான துருப்புக்களை உள்ளடக்கியதாக வரையப்பட்ட போர் முறைத் திட்டத்திற்கமைய -

மிக விரைவாகப் படைக்கு



தேசமே விழிப்புணர்வு பெற்றால் பாதுகாப்பு நிச்சயம்

இணைக்கப்பட்ட 10,000 புதியவர்கள், குறுகியகாலப் பயிற்சிகள் துரிதமாக வழங்கப்பட்டு, களமுனைகளுக்குப் பகிர்ந்து அனுப்பப்பட்டுவிட்டனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், போர் அனுபவம் மிக்க வீரர்களைக் கொண்ட படைப்பிரிவுகள் வடக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

கவசப் படைப்பிரிவுகளும் பீரங்கிப் படைப்பிரிவுகளும் தயார்ப்படுத்தப்பட்டு சமர் முனையில் நிறுத்தப்பட்டுவிட்ட தரைப்படையுடன் - 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கை போலன்றி - கடற்படையும் வான்படையும் நேரடியாகச் சண்டையில் ஈடுபடுத்கப்படும் 'முப்படைக்கூட்டு நடவடிக்கை'யாகவே, உத்தேசப் படையெடுப்பு நிகழ்த்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

பிரமாதமாகப் பிரச்சாரப்படுத்தி, பெருமெடுப்பிலானதாய் அரங்கேற்றப்பட்ட 'சூரியப் பிரகாசம்' படையெடுப்பானது, போரியல் ரீதியில் தனது உடனடி இலக்கை எய்திவிட்டபோதிலும் -

சந்திரிகா அரசின் இனப்பிரச்சினை குறித்த மையக் கோட்பாட்டை நியாயப்படுத்தி நிரூபிக்க முடியாமல், அரசியல் ரீதியாக படுதோல்வியைக் கண்டுவிட்டதையடுத்து -

தனது கட்டுப்பாட்டின் கீழ் மக்களைச் சிறைப்பிடிக்கக்கூடியதாக இராணுவ வியூகமொன்றை உருவாக்கும் விதத்தில், இன்னொரு படையெடுப்பை நடாத்தவேண்டிய கட்டாயத் தேவை, அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

எனவே, எதிர்பார்க்கப்படுகின்ற படையெடுப்பானது, அரசாங்கத்தின் மிக இன்றியமையாத அந்தத் தேவையை நிறைவேற்றக்கூடிய தந்திரோபாயங்களினூடு நகர்த்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அந்த வகையில் - உத்தேசப் படையெடுப்பானது, குறிப்பிட்ட

→

### எம் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

வட பிராந்தியத்தின் மீது இப்போது யுத்த மேகம் கவிந்துள்ளது! மாரி மழை பொய்த்துவிட்ட நிலையில், குண்டு மழை எதிர்பார்க்கப்படுகின்றது! எந்த நேரத்திலும் எந்த முனைகளிலும் களங்கள் திறக்கப்படலாம்! எனினும் - சண்டைகள் நிகழும் அரங்குகளில் மட்டுமன்றி, 'தமிழர்களின் குடியிருப்புகள்' என உள்ள எல்லாப் பகுதிகளின் மீதும் ஈவிரக்கமற்ற குண்டுத் தாக்குதல்கள் நடக்கும் என்பதே வரலாறாகும்!

அதனால், தற்காப்பு வசதிகளை உடனடியாக ஏற்படுத்துமாறு, அன்புக்கினிய எம் மக்களை வேண்டுகின்றோம். வீடுகள், சந்தைகள், பாடசாலைகள், ஆலயங்கள், மருத்துவமனைகள் என மக்கள் கூடுகின்ற எல்லாப் பொது இடங்களிலும், பதுங்குகுழிகளையும் காப்பரண்களையும் மிக விரைவாக அமைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வேண்டுகோளை நிறைவேற்றுவதில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்போமானால், பெரும் சோக விளைவுகளை நாம் சந்திக்கவேண்டி வரும் என்பதை நினைவில் கொள்வோம்!


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## சந்திரிகாவின் அரசியல் செய்தி

'ஸ்டார்' தொலைக்காட்சி நிறுவனத்திற்கு சந்திரிகா அம்மையார் ஒரு செவ்வி வழங்கி இருந்தார். மார்ச் 10ஆம் திகதி ஒளிபரப்பான அந்தச் செவ்வி தமிழ் மக்கள் மத்தியில் கொதிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக தென்னிலங்கை வாழ் தமிழர்களிடம் அது கோபத்தையும் - அதேவேளை அச்சத்தையும் கிளறிவிட்டுள்ளது. அந்தத் தொலைக்காட்சிச் செவ்வியில் சந்திரிகா அம்மையார் வெளிப்படுத்திய பேரினவாதக் கருத்துக்களே தமிழ்மக்களது கொதிப்புணர்வுக்கு காரணமாகும்.

அந்த செவ்வியின் போது அம்மையார் தெரிவித்த கருத்துக்களை மூன்று வகைக்குள் அடக்கலாம்.

(i) தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு சிறந்த தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) இந்த சிறந்த தீர்வுத்திட்டத்திற்கு தமிழ்மக்கள் ஆதரவு தெரிவித்து புலிகளுக்கு எதிராக கிளர்ந்து எழுவதற்குப் பதிலாக ஒரு நீண்ட மௌனத்தை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

(iii) இந்த தீர்வுத்திட்டத்தை தமிழர்கள் ஆதரிக்காது விட்டால் தற்போதய போர் மேலும் விரிவடைந்து முழுஅளவிலான பாரிய போராக மாறும். இது தென்பகுதி வாழ் தமிழர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் அதாவது தமிழ்மக்கள் மீதான இனவெறித் தாக்குதலை சிங்களவர்கள் நடாத்த முற்பட்டால் அதை எவராலும் தடுக்க முடியாது போகலாம்.

சந்திரிகா அரசாங்கம் வெளியிட்டுள்ள தற்போதய தீர்வுத்திட்டம் உருப்படியான ஒன்றல்ல என்பதே தமிழினத்தின் கருத்தாகும். தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்துவைக்கக் கூடிய எந்த ஒரு அடிப்படையும் இந்த தீர்வுப்பொதியில் இல்லை என்பது தமிழ் மக்களின் கருத்தாகும். தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாடோ, தமிழர் தேசிய தனித்துவம் பற்றிய அங்கீகாரமோ, தமிழரின் நிலஉரிமை பற்றிய நிலைப்பாடோ, தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான உறுதிப்பாடோ- இப்படியான அடிப்படைகள் - எதுவுமே இந்த தீர்வுத் திட்டத்தில் வரையறுக்கப்படவில்லை.

தமிழர்மீது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி - தமிழ்மக்களை மிரட்டி - அவர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முயலும் சிங்களப் பேரினவாதத்தின் ஒரு அரசியல் சூட்சுத் திட்டமாகவே இந்தத் தீர்வுப்பொதியை தமிழினம் நோக்குகின்றது. தமிழர் அரசியல் அபிலாசைகளை மறுதலிக்கும் இந்த தீர்வுத்திட்டத்தை சிறந்த தீர்வுத்திட்டம் என்று சந்திரிகா அம்மையார் பிரகடனப்படுத்துவது அவரின் பேரினவாத நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

இந்த அரைகுறைத் தீர்வுத்திட்டம் பற்றிய அதிருப்தியை தமிழர் அமைப்புகள் பல சந்திரிகா அம்மையாருக்குத் தெரியப்படுத்தி இருந்தன. அதேவேளை புலிகள் இயக்கமே தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் என்று வலியுறுத்தி புலிகளுடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட்டு இனப்பிரச்சினையை தீர்க்க முயலும்படியும் பல பொது அமைப்புக்கள் அம்மையாரை வேண்டி இருந்தன. அத்துடன், சிங்களப் படைகளின் அட்டூழியங்களுக்கு எதிராக எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடாத்தி எவ்வளவோ மகஜர்களை - தமிழரின் வெகுசன அமைப்புக்கள் - அம்மையாருக்கு அனுப்பி இருந்தன. யாழ் பிரஜைகள் குழு, யாழ் - பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம், அதிபர், ஆசிரியர் சங்கங்கள் உட்பட பல்வேறு மக்கள் அமைப்புக்கள் அறிக்கைமேல் அறிக்கைகள் அனுப்பி தமிழ்மக்களின் கருத்துக்களை - அம்மையாருக்கு இடைவிடாது தெரியப்படுத்திக் கொண்டே இருந்தன. இந்த நிலையில் தமிழ் மக்கள் ஒரு நீண்ட மௌனத்தை கடைப்பிடிக்கின்றனர் என்ற சந்திரிகா அம்மையாரின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பான ஒரு கருத்தாகும்.

அத்துடன், புலிகளுடனான போர் என்ற போர்வையில் தமிழ்மக்கள்மீது ஒரு இன அழிப்புப்போரை சந்திரிகா அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. தமிழர் படுகொலைகளை இருட்டடிப்புச் செய்வதிலும் - கொல்லப்படும் மக்களை புலிகள் என்று தவறான கருத்துப் பரப்புகையிலும் சந்திரிகா அரசாங்கம், மும்முரமாக ஈடுபடுகின்றது. அதேவேளை, வடக்கு - கிழக்கு மக்கள்மீது பொருளாதாரத்தடைகளையும் - நிவாரணத்தடைகளையும் விதித்து இனப்படுகொலையை தீவிரப்படுத்த அது முயல்கின்றது. தனது தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழர்விரோத சக்திகளுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடாத்திய சந்திரிகா அம்மையார் தமிழ் மக்களது கருத்தறிய முயற்சிகள் மேற்கொள்ளவில்லை. தமிழ்மக்களைப் பொருட்படுத்தாது - அவர்களைப் புறக்கணித்துவிட்டு தீர்வுத்திட்டம் என்ற பெயரில் ஒரு அடிமைச்சாசனத்தை வெளியிட்டுவிட்டு அதை தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டு - ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று கோருவது எவ்வளவு முட்டாள்தனம். வடக்குக் - கிழக்கின் அரசியல் யதார்த்தம் தொடர்பாக சந்திரிகா அம்மையாருக்கு மக்கள் அமைப்புக்கள் தெரிவித்த கருத்துக்கள் - வேண்டுகோள்கள் - கண்டனங்கள் என்பவற்றிற்கு எந்த ஒரு பதிலையோ அல்லது எந்த ஒரு நடவடிக்கையையோ எடுக்காது, ஒரு தொடர்ச்சியான மௌனத்தை சந்திரிகா அம்மையார் கடைப்பிடித்து வருகின்றார் என்பதே உண்மையாகும்.

தென்னிலங்கைவாழ் தமிழ்மக்கள் தீர்வுத்திட்டத்தை ஆதரிக்காது மௌனமாக இருப்பது அம்மையாரின் பேரினவாத மனதில் ஆத்திரவிதைகளை விதைத்துள்ளது. இதனால் அவர்களை மிரட்டி தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவு திரட்ட முயற்சிக்கின்றார். அதேவேளை தமிழ்மக்களை தாக்கி அழிப்பதற்கு பேரினவாத வெறியர்களுக்கு பச்சைக்கொடியும் காட்டியுள்ளார். இதேபோன்றதொரு முயற்சியை தனது ஆட்சிக்காலத்தில் ஜே. ஆரும் செய்திருந்தார். 1983 யூலை தமிழ் இனப்படுகொலையின்போது தமிழ்மக்களை சிங்களவெறியர்கள் கொன்று - அவர்களது சொத்துக்களை கொள்ளையடித்து- எரியூட்டிக்கொண்டிருந்தபோது வானொலி மூலம் உரையாற்றிய ஜே. ஆர் ஜெயவர்த்தனா இது "சிங்கள மக்களின் நியாயமான எதிர்வினை" என்று கூறி தமிழர் படுகொலைகளை ஊக்குவித்தார். அது போல "தமிழ்மக்கள்மீதான ஒரு இனவாதத்தாக்குதலை (இன்று) சிங்களவர்கள் நடாத்த முற்பட்டால் அதை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது போகலாம்" என்று 'ஸ்டார்' தொலைக்காட்சிச் செவ்வி மூலம் சிங்களவெறியர்களுக்கு அம்மையார் ஊக்கம் கொடுத்துள்ளார்.

இதேவேளை, அம்மையாரின் தந்தையினது ஆட்சிக்காலத்தில் தமிழ் இனப்படுகொலை நடைபெற்றபோது இவற்றை ஒத்த பேரினவாதக் கருத்துக்களையே எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் உதிர்த்திருந்தார். தமிழர்மீதான தாக்குதல்களை - கொலைகளை உடனடியாகவே நிறுத்த ஆவனசெய்யும்படி பண்டாரநாயக்காவை சிலர் கேட்டபோது "அவர்கள் (தமிழர்) அனுபவித்துப்பார்க்கட்டும்" (Let them taste it) என்று அவர் கூறியிருந்தார்.

இவ்விதம் தந்தை - தாய் என்று ஒரு குடும்ப பாரம்பரியத்தின் வழியில் வந்த சந்திரிகா அம்மையாரும் தனது அடிமனதில் மறைந்துகிடந்த பேரினவாத உணர்வை அந்த தொலைக்காட்சி செவ்வி மூலம் காட்டிவிட்டார். அத்துடன் தமிழர் இனப்படுகொலைக்கான நியாயங்களை உலகிற்கு முன்கூட்டியே தெரிவிப்பதிலும் இந்த தொலைக்காட்சிச் செவ்வியை அம்மையார் பயன்படுத்தி உள்ளாரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

தமிழ்மக்களை மிரட்டி - மிரட்டலுக்கு அடிபணிய மறுக்கும்போது அவர்களை இனப்படுகொலைசெய்து ஒரு இராணுவ தீர்வை முன்வைப்பதிலேயே அம்மையாரும் அக்கறையாக இருக்கின்றார் என்பதே அம்மையாரின் தொலைக்காட்சிச் செவ்வி தமிழ் மக்களுக்கு கொடுக்கும் அரசியல் செய்தியாகும். O

## பல முனைகளில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பிரதேசத்தை மட்டும் இலக்காகக் கொண்டதாக அல்லாமல், பல முனைகளினூடு நகர்த்தப்படவுள்ளது. அதாவது - வடமராட்சியை இலக்காகக்கொண்டும், தென்மராட்சியூடாக அல்லது வன்னியூடாக யாழ் நீரேரிப் பயணத்தைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு வன்னியின் இன்னும் சில முனைகளினூடு குடியிருப்புப் பகுதிகளை இலக்காகக் கொண்டும், ஒரு பன்முகப்பட்ட படையெடுப்பாக அது நடாத்தப்படலாம் என நம்பப்படுகின்றது.

கிழக்கிலங்கைப் போர் அரங்கில் சிங்களத் தரப்பு தொடர்ச்சியாகப் பேரிழப்புகளைச் சந்தித்து வருவதால், இராணுவ நகர்வுகள் சிக்கல்களுக்குள்ளாகி, அங்கு தள நிலைமை புலிகளுக்குச் சாதகமானதாக துரிதமாக மாறிவருகின்றது.

அதேசமயம் - தென்னிலங்கையில் கடும் வறட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி பெரும் பாதிப்புக்குள்ளாகி, தொழிற்சாலைகளின் இயக்கம் பெரும் தடங்கலை எதிர்நோக்கியுள்ளதோடு -

அரசியல் - இராணுவ மையங்கள் மட்டுமன்றி, பாரிய பொருளாதார கேந்திரங்களும் தாக்குதல் இலக்குகளாக மாறி உச்சகட்ட அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், பொருளாதாரரீதியாகப் பெரும் சரிவு நெருக்கடியையும் அரசு எதிர்நோக்கியுள்ளது.

கிழக்கில் தொடர்ந்து படைகள் இழப்புகளைச் சந்தித்தபோதும், தெற்கில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள போதும், வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்திரிகா அரசு உறுதிபூண்டிருப்பது ஓர் உண்மையைத்தான் தெளிவுபடுத்துகின்றது.

அதாவது -

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையில் தீர்வு காண்பதற்கே அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதே அதுவாகும்! O

# சிங்கள இனவாதத்திற்கு ஒரு மறுப்பு

## அறிமுகம்

ஈழத் தமிழரை ஒடுக்குவதற்கான ஆதார சுருதியாய் ஒரு பொய்யான கருத்துலகை சிங்கள ஆட்சியாளர் ஸ்தாபித்துள்ளனர். கற்பனை ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பொய்யான வரலாற்றிலிருந்தே, இவர்கள் தமது பொய்யான கருத்துலகத்தை, இலங்கைக்கு உள்ளும் புறமும் ஸ்தாபித்துள்ளனர். இந்தப் புனைகதையானது இன அழிப்பிற்கான ஒரு சித்தாந்தம் என்ற வகையில், இது ஒரு பாரதூரமான குற்றச் செயலாகும். இந்தப் பொய்யான கருத்துலகக் குற்றச் செயலில் இருந்துதான், தமிழருக்கு எதிரான அனைத்துக் குற்றச் செயல்களும் சுவாலை விட்டு எழுகின்றன.

முற்றிலும் உண்மையான வரலாற்றிலிருந்து, தமிழ் மக்களுக்கான நியாயமும் அவர்கள் போராட நேர்ந்த அவசியமும் இங்கு சிங்கள ஒடுக்குமுறை கூறும் கருத்துக்களுக்கு எதிரான பதிலுரையாக எழுதப்பட்டுள்ளன.

இலங்கைத்தீவை முற்றிலும் சிங்களமயமாக்குவதே சிங்கள இனவாதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். தமிழரை சிங்களவராக இனமாற்றம் செய்வது (ASSIMILATION) அல்லது தமிழரை ஒழிப்பது என்பதே சிங்கள இனவாதத்தின் பண்பாகும். "சுதந்திரத்தை"த் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர் அனைவரும் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் சிங்களமயமாக்கலை இலக்காகக்கொண்டே அமைந்தன.

சிங்கள ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா "சமாதானம்", "போர்" எனும் இரு பதங்களையும் பிரயோகித்து வருகிறார். இதில் "சமாதானம்" என்பதன் அர்த்தம், தமிழர் சரணடைந்து சிங்களமயமாக்கலை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகும்; அதனை ஏற்க மறுக்குமிடத்து போர்மூலம் இன ஒழிப்பிற்கான முன் நிபந்தனையைத் தோற்றுவித்தல் என்பதே "போர்" என்பதன் அர்த்தமாகும்.

"இந்து சமுத்திரத்தின் முத்து" என்றும், "தீவுகளின் இராஜகுமாரி" என்றும், "சொர்க்கபுரி" என்றும் வரலாற்றறிஞர்களால் வர்ணிக்கப்பட்ட இலங்கைத்தீவு இன்று, 'இந்து சமுத்திரத்தின் இரத்தத்துளிகளாய்' மாறியுள்ளது.

சிங்கள அரசு தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து ஈழத் தமிழினத்தை ஒடுக்கி வருகின்றது. அரச பலத்தையும் மற்றும் சகல உள்நாட்டு வளங்களையும் தமிழருக்கெதிராகச் சிங்கள அரசு ஒன்றுதிரட்டிப் பிரயோகிப்பது மட்டுமன்றி, அவற்றிற்கு அப்பால் அந்நிய தேசங்களிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருளாதார - இராணுவ உதவிகளைப் பெற்றும் தமிழினத்தை ஒடுக்கிவருகின்றது.

தமிழினத்திற்கு எதிரான கருத்துலகை பாமரச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி- அதனைச் சகல வகைகளிலும் பரப்புவதுடன், சர்வதேச ரீதியாகவும் பெரும் பிரச்சார யுத்தத்தைச் சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டு, தமிழினத்தைச் சட்டங்களினாலும், அரசியற் பொருளாதாரத் திட்டங்களினாலும், ஆயுதங்களினாலும், நிர்வாக நடைமுறைகளினாலும் மொத்தமாய் ஒடுக்கிவருகின்றது.

புத்தபகவான் அகிம்சையைப் போதித்தார்; ஆனால் சிங்கள பௌத்தரோ, வாளேந்திய சிங்கமாய் தமிழின எதிர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ளனர் புத்தபகவான் அரசமர நிழலில் தவமிருந்தார்; ஆனால் சிங்கள இனவாதிகளோ தமிழரின் இரத்த ஆற்றில் நீந்தி விளையாடுகின்றனர்.

இதுவரை காலமும் சிங்கள இனவாதத்திற்குத் தலைமை தாங்கிய சிங்களத் தலைவர்களிலிருந்து, சந்திரிகா ஒருவகையில் வேறுபடுகின்றார். பழைய பாணியில் இனவாதத்திற்குத் தொடர்ந்தும் தலைமைதாங்க முடியாது என்பதே இதன் உண்மையாகும். சாத்தான் வேதம் ஓதுவது போல, சந்திரிகா சமாதானம் பேசி இனவாதத்தை அரங்கேற்றுகிறார். அந்த வகையில் சந்திரிகா, 'நவ இனவாதி'யாக (Neo chauvinist) காணப்படுகிறார்.

சிங்கள இனவாதம், விருப்பு வெறுப்புக்களைக் கடந்து நிறுவனமயப்பட்டுள்ளது. எந்தவொரு மனிதனின் நல்லெண்ணத்தினாலும் தணிக்கப்படக்கூடிய நிலையில், சிங்கள இனவாதம் இன்றில்லை. அத்துடன் சந்திரிகா இனவாதத்தைத் தணிப்பதற்கான பாத்திரம் வகிப்பவருமல்லர்; மாறாக சிங்கள இனவாதத்தின் பழைய பாதை இன்றைய சூழலில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், நெருக்கடியிலிருந்து இனவாதத்தை புதிய சூழலுக்கேற்ப முன்னெடுப்பவராய் உள்ளார். எனவே, சமாதானத்திற்கான ஒரே வழி தமிழர் பிரிந்து செல்வது மட்டுமே என்பதைச் சமாதான விரும்பிகளும் சிங்களவரும் உணர்வார்களா?

இங்கு பிரச்சினை சிங்கள ஒடுக்குமுறையே தவிர, போராட்டமல்ல. ஒடுக்குவோர் பக்கத்திருந்துதான் சமாதானம் வரவேண்டுமே தவிர, ஒடுக்கப்படுவோர் பக்கமிருந்து அல்ல; ஒடுக்குமுறை தீர்ந்தாற் சமாதானம் பிறக்கும்.

தமிழரின் பிரச்சினை, வெறும் சட்டப் பிரச்சினை என்ற எல்லையை இப்போது கடந்துவிட்டது. தமிழரின் பிரச்சினை வெறும் தனிமனித உரிமைப் (Individual rights) பிரச்சினை அல்ல; தேசிய இனம் என்ற வகையிலான கூட்டுரிமை (Collective rights) பிரச்சினையாகும்; அது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையாகும்; தொடர்ச்சியான நீண்டகால ஒடுக்குமுறையின் விளைவால், இணைந்து வாழ முடியாத அளவிற்கு மனம் பிளவுபட்டிருக்கும் பிரச்சினையாகும்.

இலங்கைத்தீவில் தமிழரும் சிங்களவரும் இருவேறு தேசிய இனங்களாய் வளர்ந்துள்ளனர். காலனித்துவ ஆதிக்கத்தின் பொருட்டு தமிழ், சிங்கள இனங்களை ஆங்கிலேயர் ஒரே அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவந்தனர். இதன்பின் எண்ணிக்கையிற் பெரிய இனமான சிங்களவருடன் இணைந்து, ஐக்கிய இலங்கையில் தமது தனித்துவங்களைப் பேணிக்கொண்டு அந்நியோன்னியமாய் வாழத் தமிழர் முற்பட்டனர். ஆனால் சிங்கள பௌத்தரோ, பிழையான ஐதீகத்தின் அடிப்படையில், ஓரினத் தன்மைக்குரிய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வற்புறுத்தியும் திணித்தும் வந்தனர். இதன் விளைவாக நவீன வரலாற்றில் சிங்கள - தமிழ் இன முரண்பாடு வளர்ந்து, கூர்மை பெறத் தொடங்கியது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் பலர் விளங்கியும், ஏற்றும், வாக்குறுதிகளை அளித்தும், அவற்றிற்காக வக்காலத்து வாங்கியும் வந்தனர். இவற்றிற்கான சில உதாரணங்களாவன:

### மு. திருநாவுக்கரசு

1) சமஷ்டி அரசியல் அமைப்பு முறைதான் பல்லினத் தன்மை வாய்ந்த இலங்கைக்குச் சிறந்த தீர்வாகும் என, 1926 ஆம் ஆண்டு, எஸ். டபிள்யூ. ஆ. டி. பண்டாரநாயக்கா வற்புறுத்தினார்.

2) தமிழ் மொழி ஒரு செழிப்பான இலக்கிய வளம்மிக்க மொழியென்றும், அதனையும் உத்தியோக மொழியாக்குவதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், எனவே தமிழ் மொழியையும் உத்தியோக மொழியாக்கவேண்டும் என்றும், 1944 ஆம் ஆண்டு, அரசாங்க சபையில் பண்டாரநாயக்கா வற்புறுத்தி விவாதித்ததுடன், அது அரசாங்க சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3) நவீன ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பவேண்டிய பணி ஒரு மொழியாலன்றி இரு மொழிகளினாலுமே - தமிழ், சிங்களம் - ஆகும் என்று, 1951 ஆம் ஆண்டு, டி. எஸ்.

→






## காலமும் கோலமும்






சேனநாயக்கா அழுத்தம் திருத்தமாய்க் கூறினார்.

4) தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனத்தவர் என்றும், அவர்கள் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள் என்றும், 1944 ஆம் ஆண்டு, டொக்ரர் விக்கிரமசிங்காவின் தலைமையிலான இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது.

5) தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை 1955 ஆம் ஆண்டு, கலாநிதி என். எம். பெரேரா நாடாளுமன்றில் சமர்ப்பித்து வாதிட்டதுடன், அதற்காக அவரும் அவரது சமசமாஜக் கட்சியினரும் தீவளாவிய பெரும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வந்தனர்.

*புத்தபகவான் அகிம்சையைப் போதித்தார்; ஆனால் சிங்கள பௌத்தரோ, வாளேந்திய சிங்கமாய் தமிழின எதிர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். புத்தபகவான் அரசமர நிழலில் தவமிருந்தார்; ஆனால் சிங்கள இனவாதிகளோ தமிழரின் இரத்த ஆற்றில் நீந்தி விளையாடுகின்றனர்.*

6) தமிழையும் உத்தியோக மொழியாக்கத் தவறினால் தீவு இரத்தப் பிழம்பாக எதிர்காலத்தில் மாறும் என்றும், தீவு இரண்டாகப் பிரியநேரும் என்றும் சமசமாஜக் கட்சித் தலைவர்களான கலாநிதிகள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா போன்றோரும், கொம்யூனிஸ்ற் கட்சித் தலைவர்களான டொக்ரர் விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன் போன்றோரும் 1956 ஆம் ஆண்டு, பண்டாரநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து வாதிட்டனர்.

மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றும் இரு பெரும் சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற கொள்கையையே கொண்டிருந்தன. ஆனால், இவ்விரு சிங்களப் பெரும் கட்சிகளும் 1955 ஆம் ஆண்டு, தமது கொள்கையையும் கருத்தையும் வாக்குறுதிகளையும் நேர் எதிர் மாறாய் மாற்றிக்கொண்டன.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த வேளை, தமிழ் மண்ணில் டி.எஸ். சேனநாயக்காவினால் குடியேற்றப்பட்டிருந்த சிங்களக் குடியேற்றவாசிகள், தமிழ்க் குடியானவர் 156 பேரைக் கல்லோயாவில் வெட்டிப் படுகொலை புரிந்தனர். பிரதமர் பண்டாரநாயக்கா இதற்கு எதிராய் நடவடிக்கை எடுக்காதிருந்தார். இப் படுகொலையும், தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையும், 1958 ஆம் ஆண்டு பாரிய இனப்படுகொலையும், பிரதமர் பண்டாரநாயக்கா சமஷ்டிக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் 1957 ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தை, 1958 ஆம் ஆண்டு ஒருதலைப்பட்சமாகக் கைவிட்டமையும் போன்ற அம்சங்கள் அனைத்தும் இணைந்து, தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின. இதனைத் தொடர்ந்து, சிங்களவருடன் இணைந்து வாழ முடியாது என்ற உணர்விற்குத் தமிழர் தள்ளப் படலாயினர்.

*பிரச்சினை சிங்கள ஒடுக்குமுறையே தவிர, போராட்டமல்ல; ஒடுக்குவோர் பக்கத்திலிருந்துதான் சமாதானம் வரவேண்டுமே தவிர, ஒடுக்கப்படுவோர் பக்கமிருந்து அல்ல; ஒடுக்குமுறை தீர்ந்தால் சமாதானம் பிறக்கும்.*

1958 ஆம் ஆண்டு தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய இனப்படுகொலை பற்றிச் சிங்களவரான பிரபல பத்திரிகையாளர் தார்சி வித்தாச்சி தான் எழுதிய அவசரகாலம் '58 (Emergency '58) என்ற நூலின் முடிவில், ''தமிழர், சிங்களவர் ஆகிய இரு இனங்களும் பிரிந்து செல்லும் நிலைக்கு வந்துவிட்டனவா?'' என்ற வினாவை எழுப்பியிருந்தார்.

தமிழர் சிங்களவருடன் இனியும் இணைந்து ஐக்கியமாய் வாழ முடியாது என்பதை, 1955 ஆம் ஆண்டிற்கும் 1958 ஆம் ஆண்டிற்கும் இடையேயான காலகட்டச் சம்பவங்கள் துலக்கமாய் எடுத்துக் காட்டின. இப்படி இருந்த போதிலும், சிங்களவருடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் வாழ்வதற்கான முயற்சிகளைத் தமிழர் தொடர்ந்தும் மேற்கொண்டனர்; ஆனால், சிங்கள ஆட்சியாளர் ஓரினத்தன்மை கொண்ட சிங்கள மேலாதிக்கத்தினைத் தொடர்ந்து வளர்ப்பதிலேயே அக்கறை செலுத்தினர்.

காலநேரம் தவறாது, தமிழரின் இரத்தத்தாலும் கண்ணீராலும் சிங்கள - பௌத்தத்திற்கு அபிஷேகம் நிகழ்த்தப்படும் தீவாக இலங்கை உள்ளது. இப்படி ஒரு துயரம் ஏன், எப்படி, இத்தீவைப் பீடித்தது?

'' இலங்கை சிங்கள - பௌத்தருக்கே சொந்தமான தீவு.''

'' தமிழர் இலங்கைத்தீவின் அந்நியர்.''

'' தமிழர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த படையெடுப்பாளர்.''

'' தமிழர் சிங்கள பௌத்த நாகரிகத்தின் முதன்மையான எதிரிகள். ''

இப்படியான கருத்துக்களே சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டு, நீக்கமற வேரோடியுள்ளன.

சிங்கள - பௌத்த இன, மதவாதிகளும் அரசியல்வாதிகளும் அரச - மத நிறுவனங்களைச் சார்ந்து தமது நலன்களைத் தக்கவைத்துள்ள புத்திஜீவிகளும் இணைந்து, மேற்படி தவறான எண்ண ஓட்டங்களையும் கருத்துக்களையும் சாதாரண சிங்கள மக்களின் நெஞ்சங்களில் விதைத்துள்ளனர். தமிழருக்கு உரிய உரிமைகளை ஏற்றுக்கொள்வதென்பது சிங்கள - பௌத்தத்திற்கு புதைகுழி தோண்டுவதாகவும், தமிழரை ஒடுக்குவதென்பதே சிங்கள - பௌத்தத்திற்கு ஆற்றும் பெரும் கைங்கரியமென்பதாகவும் சாதாரண சிங்கள மக்கள் கருதும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கென புத்தபிரானால் இலங்கைத்தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற ' தம்மதீப ' கருத்தையும், இலங்கைத்தீவு சிங்களவருக்கே உரியது என்ற ' சிங்கதீப' கருத்தையும் இணைத்து, சிங்கள - பௌத்தருக்கே இலங்கை சொந்தமானது என்ற பொய்யானதும் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாததும் காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்ததுமான ஐதீகக் கருத்திற்கு சிங்களத் தலைவர்கள் புத்துயிரூட்டி, அதன் அடிப்படையில் தமிழரை ஒடுக்குகின்றனர்.

*பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கென புத்தபிரானால் இலங்கைத்தீவு தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற 'தம்மதீப' கருத்தையும், இலங்கைத்தீவு சிங்களவருக்கே உரியது என்ற 'சிங்கதீப' கருத்தையும் இணைத்து, சிங்கள – பௌத்தருக்கே இலங்கை சொந்தமானது என்ற, பொய்யானதும் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாததும் காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்ததுமான ஐதீகக் கருத்திற்குச் சிங்களத் தலைவர்கள் புத்துயிரூட்டி, அதன் அடிப்படையில் தமிழரை ஒடுக்குகின்றனர்.*

சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறுவதாக நம்பவைக்கப்பட்டுள்ள - கற்பனை வளமும், கட்டுக் கதையும் மிக்க - மஹாவம்சம் எனும் நூலை அடிப்படையாகக்கொண்டே, மேற்படி தவறும் குற்றமும் மிக்க கருத்துருவம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

மஹாவம்ஸ நூலின்படி, சிங்கத்திற்குக் கருத்தரித்த - சிங்கத்தின் வழிவந்தோரே சிங்களவர் என்றும், அத்தகைய வழித்தோன்றலில் உருவாகி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய முதல் மனிதன் விஜயன் என்றும், இவனே இலங்கையின் முதல் மனிதன் என்றும், அப்போது இலங்கையில் ' இயக்கர் ' வாழ்ந்து வந்ததாகவும் அந்த ' இயக்கரை ' விஜயன் வெற்றிகொண்டு முதலாவது சிங்கள அரசை அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு நிர்மாணித்ததாகவும் கூறப்படுகின்றது.

கி. மு. 5ஆம் நூற்றாண்டில் விஜயன் அவனது எழுநூறு தோழர்கள் சகிதம் இலங்கை மண்ணில் முதல்முறையாகக் கால்வைத்த நேரத்தில் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்து கொண்டிருந்ததாகவும், அவ்வேளை புத்தபிரான், ''இப்போது இலங்கையிற் கால் வைத்துக்கொண்டிருக்கும் விஜயனின் வழித்தோன்றல்களே பௌத்த தர்மத்தைப் பேணி வளர்க்கவும் நிலைநாட்டவும்போகின்றவர் என்று கூறியதாகவும், அந்தவகையில், 'பௌத்த தர்மத்தை பூமியில் நிலைநாட்ட புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தம்மதீபமே' இலங்கைத்தீவு என்றும் மஹாவம்சத்தில் எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய மஹாவம்ச கருத்துக்களைசிங்கள அரசு, இந்த 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிற்கூட, பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகம் வரை பாடப்புத்தகங்களில் எழுதியும் போதித்தும் வருகின்றது. இத்தகைய கட்டுக் கதையின் ஊடாகவே, இலங்கைத்தீவு சிங்களவருக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்து ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் கலை - இலக்கியங்களிலும் சமய, சமூக, அரசியற் பொதுக்கூட்டங்களிலும் ஏனைய பொது வைபவங்களிலும் பெரும்பாலான வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் மேற்கூறப்பட்ட கருத்துக்களே எடுத்துரைக்கப்படுகின்றன. இதனால், நல்லிதயங்கொண்ட சிங்களவர்கூட இலகுவாக மூளைச்சலவைக்குப் பலியாகிவிடுகின்றனர். வெறும் அரசசார்பு, சுயபதவி நோக்கங்களுக்கு அப்பால், மேற்படி சூழலால் மூளைச்சலவைக்குப் பலியான புத்திஜீவிகள் பலருண்டு. இந்த மூளைச்சலவை வியாதிக்கு அப்படியே பலியாகிவிடாத - விதிவிலக்கான சிங்களப் புத்திஜீவிகள் சிலர் இருக்கின்றனராயினும், அவர்களிடமும் சூழலின் மூளைச்சலவைத் தாக்கம் குறைந்தபட்சமாயினும் இருக்கவே செய்கின்றது. அதாவது, இத்தகையோர் தமிழருக்குப் பிரச்சினை உண்டு என்று கூறுவார்கள்; ஆனால், பிரச்சினைக்கான தீர்வில் வழுவழுத்து, இறுதியில் சிங்கள இனவாதத்தின் பக்கம் இழுபட்டுவிடுகின்றனர்.

கி. மு. 5ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனே இலங்கைத்தீவின் முதல் மனிதன் என்று கூறப்படுவதை ஆராய்வோம்...... இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையில் மனிதன் வாழ்ந்துள்ளமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. உதாரணமாக, 'பலாங்கொட மனிதன்' எனப் பெயரிடப்பட்டுள்ள எலும்புக்கூட்டினைக் கூறலாம்.

மேலும் இலங்கையின் தெற்கு, வடமத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைக் கொண்ட திஸமகாராம, அனுராதபுரம், பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, திரியாய் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சான்றுகளின்படி, கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற் பண்பாட்டை உடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இப் பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழ்ந்தனர். இது இவர்களுக்கே உரிய சிறப்பான பண்பாடாகும்; இது திராவிடப் பண்பாட்டின் ஒரு முக்கிய மூலக்கூறாகும். இப் பெருங்கற் பண்பாட்டு மக்களே இலங்கையின் தொல்குடியினர் என்ற கருத்தினை தெரணியகல, சுசந்த குணதிலக, சேனக பண்டார போன்ற சிங்கள ஆராய்ச்சியாளர்களும் விமலா பேக்லின் போன்ற வெளிநாட்டு ஆய்வாளரும் தெரிவித்துள்ளனர்.

இவற்றின்மூலம் கி. மு 5 ஆம் நூற்றாண்டில் குடியேறிய விஜயன் என்பவனே இலங்கையின் முதல் மனிதன் என்ற கருத்து, அடியோடு கேலிக்கூத்தாகிவிடுகின்றது. விஜயன் சிங்கத்தின் வாரிசு என்பது எப்படிக் கற்பனைக் கதையோ அப்படியே, விஜயனே இலங்கையின் முதல் மனிதன் என்பதும் கற்பனைக் கதையாகும். விஜயன் முதல் மனிதன் என்பதற்கு மட்டுமல்ல, அப்படி ஒரு மனிதனோ அன்றி மனிதக் குழுவோ இலங்கைக்கு வந்ததற்கும் எத்தகைய தொல்பொருட் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை. விஜயன் கட்டுக்கதை என்னும்போது, விஜயனைச் சின்னமாகக்கொண்ட '' தம்மதீப '' கருத்தும் கட்டுக்கதை என்பது புலனாகிறது.

இந்த வகையில், இலங்கைத்தீவு சிங்கள - பௌத்தருக்கு மட்டுமே சொந்தமானது என்ற பிழையான - ஆதாரமற்ற - கட்டுக்கதையை முதலில் நிராகரிப்பதுடன், உண்மையான வரலாற்றைச் சற்று நோக்குதல் நலம். தமிழரா அன்றிச் சிங்களவரா இத்தீவிற்கு முதலில் வந்தவர் என்றோ, மூதாதையருக்குத்தான் பூமி சொந்தமானது என்றோ வாதங்களை முன்வைப்போமாயின், மனிதனுக்கு மூலமான குரங்கிற்குத்தான் பூமி சொந்தம் என்ற முடிவிற்குப் போகவேண்டிவரும். உண்மையான வரலாற்றைத் தேடி அறிவதென்பது, மனிதனின் சமூக வளர்ச்சி விதிகளைக் கண்டுகொள்வதற்காகவே தவிர, வரட்டுப் பெருமைகளையும் - பிடிவாதங்களையும் மேற்கொள்வதற்காக அல்ல.

(அடுத்த இதழில் முடிவுறும்.) O

# கொலை - மன்னிப்பு - கொலைக்கு அனுமதி

ஜே. வி. பியினரின் கிளர்ச்சியின்போது ( 1987 - 1990 ) காணாமற்போன அல்லது பலியான சிங்கள மக்களது படுகொலையில் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகளைக் கண்டறியும் முயற்சியில், சந்திரிகா அரசு இறங்கியிருந்தது. சந்திரிகா அம்மையாரின் தேர்தல் வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. அதன் அடிப்படையில், சில படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகச் சில படை அதிகாரிகளை, விசாரணைக் குழு முன் சிங்கள மக்கள் அம்பலப்படுத்தி உள்ளனர்.

இந்தப் படை அதிகாரிகளையும் மற்றும் சிப்பாய்களையும் விசாரணைக்கூண்டில் நிறுத்துவதற்கு வசதியாக, கட்டாய விடுமுறையில் உடனடியாகவே அனுப்பிவைக்கும்படி, ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார். ஆனால், இந்த உத்தரவை சில நாட்களிலேயே அவர் மீளப் பெற்றுவிட்டார் என, கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொலைச் சூத்திரதாரிகளாக இனங்காட்டப்பட்டுள்ள அதிகாரிகளுள் நான்குபேர் பிரிகேடியர்கள் ஆவர். இவர்களில்ஒருவருக்கு - 'றிவிரச' இராணுவ நடவடிக்கைக்காக - றணவிக்கிரம பதக்கத்தைச் சந்திரிகா அம்மையாரே வழங்கியிருந்தார். இவரது பெயரை பத்திரிகைகள் வெளியிடவில்லை. ஆனால் அவர், பிரிகேடியர் ஜானக பெரேராவே ஆவார் ( சிறீலங்கா இராணுவத்தில் மொத்தம் 47 பிரிகேடியர்கள் இருக்கின்றனர் ).

எம்பிலிபிட்டியா என்ற இடத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் பலரின் படுகொலைக்கு இவர்தான் பொறுப்பு என்று, விசாரணைக்குழு முன், அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். ஜே. வி.பி. கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின்னர், இவர் மணலாற்றுப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கே சிங்களக் குடியேற்றங்களைத் துரிதகதியில் ஏற்படுத்தி தமிழரின் நிலங்களை அபகரிப்பதில் முன்னின்றார். அதற்குப் பரிசாக, ஜானகபுர என்று ஒரு குடியேற்றத்திற்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அங்கு ஒரு பாரிய இராணுவ முகாமை அமைத்து, அப்பகுதியின் இராணுவ நிருவாகியாக இவர் பல வருடங்கள் செயறபட்டுவந்துள்ளார்.

இவ்விதம் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளில் பலர், யுத்தகளத்தில் '' திறமை '' யாகப் பணியாற்றி வருகின்ற காரணத்தாலும் உயர் அதிகாரிகளாக இருக்கின்ற காரணததாலும், அவர்கள் மீதான விசாரணைகள் போர் நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்று காரணம் கூறப்பட்டுள்ளது. அதனாலேதான், நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்ட சந்திரிகா அம்மையார் பின்னர் தனது கட்டளையை மீளப்பெற்றுக்கொண்டாராம்.

அதாவது, ஒரு சமாதான சூழல் ஏற்பட்டால், வடக்கு - கிழக்கில் நடந்த தமிழர் படுகொலைகளுக்கும் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்படலாம் -

அப்படி அமைக்கப்பட்டால் தாமும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு தண்டனை அபாயத்தை எதிர்நோக்கலாம் என்று, இராணுவ அதிகாரிகள் அஞ்சுவார்களாம் -

அத்தகைய அச்சங்கள் படையினரின் போரிடும் உறுதியை (அதாவது படுகொலை வெறியை ) சிதைக்குமாம் -

இதனால் போர்க்களத்தில் அரசுப் படைகள் தோல்வியடையக்கூடிய அபாயம் தோன்றலாமாம் -

இது எப்படி இருக்கிறது!

சிங்கள மக்களைப் படுகொலை செய்த கொலையாளிகளை அந்த மக்களே ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்திய பின்பும், கொலையாளிகளுக்கு அரசின் மன்னிப்புக் கிடைத்துள்ளது. இந்த மன்னிப்பு, தமிழர் படுகொலைக்கு வழங்கப்பட்டுள்ள ' லைசென்ஸ் ' ஆகும்! சந்திரிகா அரசின் மனிதாபிமான முகம் இதற்கூடாகத் தெரிகின்றதா!

பிரேமதாசா காலத்து படுகொலைகளுக்கு விசாரணைக் குழுக்களை அமைக்க சந்திரிகா அம்மையார் முடிவெடுத்ததற்கு, வெறும் அரசியல் போட்டியும் - ஆட்சியைப் பிடிப்பதும்தான் காரணம் என்று, அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில், 1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது படுகொலை செய்யப்பட்ட பத்தாயிரம் சிங்கள மக்களது கொலைகளை ஆராயவும் ஒரு ஆணைக்குழுவை அவர் நியமித்திருக்கலாமே என, அவர்கள் கேட்கின்றனர். அந்தப் படுகொலைகள் சந்திரிகா அம்மையாரின் தாயாரினால் நடாத்தப்பட்டன என்பதற்காகவே, அதுபற்றிப் பேசுவதைச் சந்திரிகா அரசு தவிர்க்கின்றது.

இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது நாற்பதாயிரம் சிங்களவர்கள் பலியானதாக ஒரு அறிக்கை கூறுகின்றது; இது அறுபதாயிரம் வரை அதிகரிக்கும் என்று இன்னொரு அறிக்கை கூறுகின்றது. ஆனால், சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், 1300 ஜே. வி. பி. உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; 200 இராணுவத்தினரும், 310 பொலிசாரும் பலியாகியுள்ளனர். இதேவேளை ஐ. தே. கட்சியின் ஆதரவாளர்கள் 1900 பேரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 190 பேரும், ஐக்கிய சோசலிச கூட்டணியைச் சேர்ந்த 125 பேரும், அரசு உத்தியோகத்தர் 810 பேரும், பௌத்த பிக்குகளில் 60 பேரும், படையினரின் குடும்பங்களைச் சேர்ந்த 190 பேரும் கொல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. ○

## செய்தி ஆய்வு

# கிரிக்கெட்டும் அரசியலும்

சில மாதங்களுக்கு முன்புவரை கிரிக்கெட் விளையாட்டை சிங்கள தேசத்தின் ஒரு சாபக்கேடாக, பேரினவாதிகள் சித்திரித்தனர். தமிழினத்திற்கு எதிரான போரில் சிங்களப் படைகள் பின்னடைவுகளையும் பேரிழப்புகளையும் சந்தித்துக்கொண்டிருந்தபோது - இவை எல்லாவற்றையும் அசட்டைசெய்துவிட்டு - ஒரு பகுதியினர் கொழும்பில் கிரிக்கெட் விளையாடி உல்லாசமாகப் பொழுதுபோக்குகின்றனர் என்று, பேரினவாத சக்திகள் குற்றம் சாட்டின. இனவெறியை அடிநாதமாகக்கொண்ட சிங்களப் பத்திரிகை உலகம், இந்தக் குற்றச்சாட்டை மூலைமுடுக்கெல்லாம் பரப்பியது.

போர்வெறி உணர்வுடன் சிங்கள மக்களை வைத்திருக்க விரும்பிய பேரினவாதிகளின் முயற்சிகளுக்கு, கிரிக்கெட் விளையாட்டு தடையாக இருப்பதாக அவர்கள் கருதினர். அதாவது, சிங்களத் தேசியவாதத்திற்கு குந்தகம் விளைவிக்கும் ஒரு விடயமாக, கிரிக்கெட் விளையாட்டைப் பேரினவாத சக்திகள் விமர்சித்தன. கிரிக்கெட் விளையாடுவோரையும் - அதன் தீவிர இரசிகர்களையும் சிங்கள இனத்தின் துரோகிகள் போலக் காட்ட அவர்கள் முயன்றனர்.

ஆனால் மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு மற்றும் உல்லாசப் பயணிகளுக்கு எல்லாளன் படை விடுத்த எச்சரிக்கை என்பவை காரணமாக உலகக் கிண்ணத்திற்கான ஆரம்ப ஆட்டங்களில் கலந்துகொள்ளக் கொழும்பு வருவதற்கு அவுஸ்திரேலிய அணி மறுத்தபோது, அதே பேரினவாத சக்திகள், கிரிக்கெட் விளையாட்டைத் தமது போர்வாளாக உபயோகித்தன; பேரினவாத வெறியை ஊக்குவிக்க, தாம் விமர்சித்த கிரிக்கெட் விளையாட்டையே ஒரு கருவியாக எடுத்தன. மற்றைய நாடுகளின் வருகையை அவுஸ்திரேலியா தடுக்குமாயின் அதனுடனான இராஜதந்திர உறவுகளில் நெருக்கடி ஏற்படும் என்று, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் எச்சரித்திருந்தார். சிங்களப் பத்திரிகை உலகம் அவுஸ்திரேலியாவையும் அதன் அணித்தலைவரையும் திட்டித்தீர்த்து - சவால்களும் விடுத்தது. அந்தளவுக்கு, இம்முறை உலகக் கிண்ண கிரிக்கெட் விளையாட்டை, சிங்களப் பேரினவாதம் அரசியல்மயப்படுத்தியது. ''சாபக்கேடு'' என்று பேரினவாதிகளால் விமர்சிக்கப்பட்ட கிரிக்கெட் விளையாட்டு, அப்பேரின சக்திகளால், ''தேசத்திற்குப் பெருமை தேடித்தந்த'' தேசிய வெற்றியாக கொண்டாடப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டை விமர்சித்த போதும், பின்னர் உலகக் கிண்ண ஆட்டங்களின்போது கிரிக்கெட் விளையாட்டை ஆதரித்த போதும், பேரினவாத சக்திகளிடம் ஒரே ஒரு நோக்கமே இருந்தது சிங்களத் தேசிய வெறியைச் சிங்கள மக்களிடம ஊட்டுவதே அந்த நோக்கமாகும். இதனால் சிறீலங்கா அரசும் பல அரசியல் நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. போரில் அரசுப் படைகள் பின்னடைவுகளைச் சந்தித்தபோது, அரசு எதிர்கொள்ளவேண்டியிருந்த குற்றச்சாட்டுகளில் சில - சுயவிமர்சனம் என்ற ரீதியில் - கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபாடுகொண்ட ஒருபகுதிச் சிங்கள மக்கள் மீதே போய் விழுந்தது; ஆட்சியாளர்களுக்கு அது நன்மையையே வழங்கியது. அதேபோல, பேரினவாத சக்திகள் கிரிக்கெட்டை ஆதரித்தவேளை, சிங்கள இனத்தின் முழுக்கவனமும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிமீது திரும்பியது; இதனால், கொழும்புக் குண்டுவெடிப்புகளின் அரசியல் தாக்கங்களிலிருந்து ஆட்சியாளர்கள் தற்காலிகமாகத் தப்பிக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

வலிகாம மண்ணைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்தபோது, சிங்கள இனம் கிரீடம் சூட்டிக்கொண்டதாக பேரினவாதிகள் குதித்து மகிழ்ந்தனர்; உலகக் கிண்ணத்தை சிறீலங்கா கிரிக்கெட் அணி தமதாக்கிக்கொண்டபோது, அந்தக் கிரீடத்தில் முத்துக்கள் பதிக்கபபடடுவிட்டதாக அதே பேரினவாதிகள் உணர்கின்றனர்.

இதேவேளை, சிங்கள அரசும் - இந்திய அரசும் இன்று கூடிக்குலாவினாலும், சிங்கள மக்களிற்கும் இந்திய மக்களிற்கும் இடையே பன்னெடுங்காலமாக இருந்துவரும் வரலாற்றுப் பகைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கல்கத்தாவில் நடந்த இந்திய - சிறீலங்கா அணிகளுக்கிடையேயான கால் இறுதி ஆட்டம் அதைத் துலாம்பரமாகக் காட்டிவிட்டது. அந்த ஆட்டத்தில் சிறீலங்கா அணி வெற்றிக்கனிக்கு அருகில் சென்றதை, இந்திய இரசிகர்களால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை; கல்லெறிந்து - குழப்பம் விளைவித்து, ஆட்டத்தை இடையில் தடுத்துவிட்டார்கள்.

இதேவேளை, இந்திய அணியை வெற்றிகொண்ட செய்தியைச் சிங்கள மக்கள் ஒரு தேசிய எழுச்சியாகவே கொண்டாடினர். பட்டாசுகள் கொளுத்தி - விருந்துகள்வைத்துக் கொண்டாடினர்; சில இடங்களில் சிங்களப் படையினர் வானைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டாடினர் என, பத்திரிகைச் செய்திகள் கூறின. இந்திய - சிறீலங்கா உறவு என்பது அரசுகளுக்கிடையேயான உறவேயன்றி இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவல்ல என்பதை, இநத உலகக் கிண்ண கிரிக்கெட் விளையாட்டு காட்டியுள்ளது! ○

# ஏவுகணை இராஜதந்திரம்

'கொம்யூனிசத்தின்' வீழ்ச்சியுடன் 'பனிப்போர்' முடிவுக்கு வந்துவிடடது என்று உலகம் கணித்தது. ஆனால், 'மஞ்சள் டிறகனின்' எழுச்சியுடன் அது புதிய வடிவம் எடுத்துள்ளதா என, இப்போது உலகம் சந்தேகிக்கின்றது. சோம்பிக்கிடக்கும் ஒரு பூதமாகவே, சின நாட்டை மாவீரன் நெப்போலியன் நோக்கினான். அதனாலேதான், ''துயில்கொள்ளும் இராட்சதனைத் தட்டியெழுப்பிவிடாதீர்கள்'' என்று, சீனா தொடர்பாக தனது தளபதிகளுக்கு அறிவுரை வழங்கியிருந்தான். துயில் கலைந்து எழுந்தால், அந்த இராட்சதன் அனைவரையும் விழுங்கிவிடுவான் என்ற அச்சம் நெப்போலியனிடம் இருந்ததையே, அவனது கூற்று காட்டுகின்றது. ஆனால் இன்று, சீனா தானாகவே எழுந்துநிற்கத் தொடங்கிவிட்டது; ஒரு வல்லரசுவனப்பு அதற்கு வந்துவிட்டது. அமெரிக்காவிற்குப் போட்டியான ஒரு இராணுவ - பொருளாதார வல்லரசாகச் சீனா வளர்ந்துவருகின்றது என்பது பலரது அபிப்பிராயம். அதனது பாரிய ஆட்பலமும், பொருளாதாரத்தில் இன்று அது அடைந்துவரும்அபிவிருத்தியும், இராணுவத்துறையில் அது கண்டுவரும் முன்னேற்றமும் சீனாவை உலக வல்லரசாகக் கணிக்கவைக்கின்றன. ஆனால், தாய்வான் என்கின்ற ஒரு சிறு தீவு 'கண்ணுக்குள் விழுந்த தூசியாக' சீனாவை உறுத்தத் தொடங்கியுள்ளது.

சீனாவின் ஒருபகுதிதான் தாய்வான். சீனப் புரட்சிக்காலத்தில் மாஓ - சே - துங்கின் கொம்யூனிச மக்கள் இராணுவம், அன்றைய சீன ஆட்சியாளரான சியாங்கை - ஷேக்கின் தேசிய இராணுவத்திடமிருந்து சீனாவை மீட்கத் தொடங்கியதும், தோல்வியுற்ற சியாங்கை ஷேக்கின் படை தாய்வான் தீவிற்குள் புகுந்து, அதனைத் தனது இறுதிக் கோட்டையாக மாற்றியது. சீனநிலப்பரப்பில் இருந்து 130 மைல் தொலைவில் - கடல்நடுவே - தாய்வான் இருக்கின்றது. மாஓ - சே - துங்கிடம் அன்று, பலமான கடற்படை இருக்கவில்லை; அத்துடன் சியாங்கை ஷேக்கின் படைகளுக்கு அமெரிக்க வல்லரசு ஆதரவுமளித்தது. இவைகாரணமாக, தாய்வான்தீவை கொமயூனிச மக்கள்இராணுவத்தால் வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால் சீனாவை கொம்யூனிச அரசும், தாய்வானை முதலாளித்துவ அரசும் ஆளத்தொடங்கின. பிளவுபட்டிருந்த நாடுகள் மீண்டும் ஒன்றுசேரும் இந்த உலகசூழலைத் தனக்குச் சாதகமாக எடுக்கும் சீனா, தாய்வான் தன்னுடன் இணைந்துகொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. சீனாவுடன் இணைவதை தாய்வான் அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கின்றது; ஆனால், அது அமைதி வழியில் நடைபெற வேண்டும் என்று தாய்வான் கூறுகின்றது. இந்தக் கூற்றில் சீனா சந்தேகமடைகின்றது. தாய்வானை ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தவே தாய்வானிய அரசு முயல்கின்றது என்று சீனா எண்ணுகின்றது. மிகவிரைவில் தாய்வானில் நடைபெறடபோகும் ஜனாதிபதித்தேர்தலை சுதந்திரப் பிரகடனத்திற்கான முதற்படியாகத் தாய்வானிய அரசு பயன்படுத்தும் என்று, சீனா அஞ்சுகின்றது. தாய்வானின் இந்த எண்ணத்தில் மண்ணைப்போடும் நோக்குடன், சீன - தாய்வானிய கடலில், தொடர்ச்சியான இராணுவ ஒத்திகைகளையும் ஏவுகணைப் பரிசோதனைகளையும் சீன அரசு நடாத்தி, தாய்வான் அரசை மிரட்டிவருகின்றது.

தாய்வானிய அரசிற்குப் பக்கபலமாக அன்றிலிருந்து அமெரிக்கக் கடற்படை செயற்படுகின்றது. சக்திமிக்க விமானந்தாங்கிக் கபபல் ஒன்றின் தலைமையில் ஒரு அமெரிக்கக் கப்பற்படை தாய்வானுக்கு அருகே சர்வதேசக் கடலில் நிலைகொண்டிருந்தது. ஆனால் சீனாவின் இந்த இராணுவ முஸ்தீபுகளைத் தொடர்ந்து, மேலும் ஒரு விமானந்தாங்கிக் கபபலின் தலைமையில் ஒரு கப்பற்படையை அமெரிக்கா அனுப்பி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இமாலயப் பொய்யும் இனப்படுகொலை எண்ணமும்

ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் இராணுவப் பிரிவான 'தேசத்தின் ஈட்டி" எனப்படும் படையணியை முதன்முதலில் உருவாக்கிய 1961 டிசெம்பர் 16ஆம் நாள், மண்டேலாவால் வெளியிடப்பட்ட அறிக்கை, இவ்வாறுதான் கூறியது: ''மக்களது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றிலும் ஒரு தருணம் வரும்; அப்போது இரண்டே இரண்டு வழிகள்தான் மிஞ்சியிருக்கும். ஒன்று பணிந்து போதல்; மற்றது துணிந்து போதல். அந்தத் தருணம் இப்போது தென்னாபிரிக்காவிற்கு வந்திருக்கின்றது.'' வரலாறு உதிர்த்த பொன்மொழியிது. இங்கே தென்னாபிரிக்கா என்ற பதத்திற்குப் பதிலாக தமிழீழம் என்ற பதத்தினை இடுவதே, எமக்கான வரலாற்றுத் தாய் வகுத்த வழியாகிவிட்டது. வரலாற்றுத் தாய் திருயபத் திரும்ப ஒரே செய்தியைப் பல வழிகளாலும் எமக்கு இடித்துரைக்கின்றாள். எம்மக்கள் தீர்க்கமானதொரு முடிவினை எடுத்து பூமிப்பந்திலே புதிய தேசமொன்றைப் பிரசவிக்கும் நாளுக்காக, மிகப் பொறுமையாக அவள் காத்திருக்கின்றாள். ''எப்போதோ முடிந்த காரியம்'' என்று யோகர் சுவாமிகள் உரைத்ததாகக் கூறுவார்கள். ''ஒவ்வொரு தடவையும் எல்லாவற்றையும் முதலிலிருந்து சொல்லவேண்டியிருப்பதே இவ்வுலகின் துன்பியல் நிகழ்வு'' என அறிஞர் ஒருவர் சலிப்புடன் கூறியதாகக் கூறப்படுகின்றது. எது எவ்வாறு இருந்தாலும், எம் மக்கள் எல்லாவற்றையும் முதலிலிருந்து ஒருமுறை மீட்டிப்பார்க்க வேண்டிய அவசியமும், அவசரமும் இப்போது நேர்ந்துவிட்டது.

ஏனென்றால், சில தினங்கட்கு முன்னர்தான் சந்திரிகா அம்மையார் அவர்கள் தனது மௌனம் கலைத்தார். ''வலிகாமத்திற்கு வாருங்கள்'' என வரவேற்புரை நல்கிய பின்னர், இந்தியாவின் 'ஸ்ரார்', சிறீலங்காவின் 'ஈரிவி' தொலைக்காட்சிகளுக்கு தமிழ் மக்கள் குறித்தான தனது எண்ணப்பாட்டை இப்போது எவ்வித ஒழிவு மறைவின்றித் தெளிவாகக் கூறிவிட்டார். பொறுமையிழந்தவராக அம்மையார் திருவாய் மலர்ந்தார்: ''புலிகளின் பயங்கரவாதப் போராட்டம் எனக்கு வெறுப்பையும், எரிச்சலையும் தருகின்றது. தமிழ் மக்களின் போக்கும் எனக்கு விளங்கவில்லை. புலிகட்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டிய வரலாற்றுக் காலம் இது. ஆனால் அவர்கள் தொடர்ந்தும் அமைதி காத்தால், அவர்கள் புலிகட்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்றே நான் பொருள் கொள்வேன்.'' இதன் பொருள் என்ன ? ஜே. ஆர் இதன் பொருளை விளக்கியிருக்கின்றார்: ''எனக்கு உண்மையிலே விளங்கவில்லை; என்ன குறைபாடு அவர்கட்கு என்று புரியவுமில்லை. யாழ்ப்பாண மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றி எனக்கு அக்கறையுமில்லை. இப்போது அவர்கள் பற்றியோ, அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ, அவர்களது உயிர்களைப் பற்றியோ, அல்லது தமிழர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ, எனக்கு எவ்வித கவலையுமில்லை.''

1983 யூலை 11 ஆம் திகதி 'டெய்லி ரெலிகிராப்' இலண்டன் ஏட்டில் வெளியான செவ்வியது. அறுபதுகளில் பத்தேகம விமலவன்ச அனுநாயக்க தேரர் கூறினார்: ''சிறீலங்கா பௌத்தன் எப்போதும் எவர்க்கும் எந்தத் தீங்கும் இழைத்தது கிடையாது. அந்நியரைக்கூட வரவேற்று உபசரிப்பதே சிங்கள பௌத்தனின் வழமை. போர்கள் நடந்தால்- அவை, தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு மட்டுமே எதிரானதாக இருக்கும்.'' இவை எல்லாவற்றையும் தொகுத்து, அண்மையில் புத்த மகாசங்கத்தினரின் உதகியோக பூர்வ மாநாடு 'பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்' கூடியபோது 1500 பிக்குகளும் ஏகோபித்துத் தீர்மானித்த 5 தீர்மானங்களும் கூறுகின்றன. சிங்கள அரசியலின் எல்லைக் கோட்டைத் தெளிவாகக் கீறின அத்தீர்மானங்கள். முதலிரண்டு தீர்மானங்கள்மூலம் தமது வரலாற்று வழிவந்த பேரினவாத நிலைப்பாட்டை மகாசங்கத்தினர் தெளிவுபடுத்தினர். சந்திரிகா அரசின் 'அமைதிப் பொதி'க்கான சட்டவரைவு என்பது எவ்வளவு முட்டாள்தனமானது எனப் பொருள்படத்தக்கதாக, இலங்கைத் தமிழர்கட்கு என்ன குறைகள் இருக்கின்றன என்பதைத் தமக்கு முதலில் விளங்கப்படுத்த வேண்டுமென, முதல் தீர்மானம் கூறுகின்றது. இரண்டாவது தீர்மானமோ, 2500 ஆண்டுகளாக சிறீலங்காவே உலகின் ஒரேயொரு சிங்கள பௌத்த நாடாக இருப்பதை அரசுக்கு நினைவுபடுத்தி நிற்கின்றது. இவ்வளவு காலமாக பௌத்தசாசனத்தை மக்களும், மகாசங்கத்தினரும், ஆட்சியாளரும் எவ்வாறு பாதுகாத்தனர் என்பதையும்- இன்று எப்போதுமில்லாத வகையில் பௌத்தசாசனத்திற்கும் அதன் பண்பாட்டிற்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, காலத்திற்குக் காலம் வழிதவறிப்போன சிங்களத் தலைவர்கள் முட்டாள்தனமாக தமிழர் தரப்போடு செய்ய முற்பட்ட உடன்பாடுகளையும் நினைவுபடுத்தி, அம்மையாரின்

**வே. பாலகுமாரன்**

தீர்விலுள்ள ஆபத்துக்களை விலாவாரியாக விளக்கும் அடுத்த 3 தீர்மானங்களும், அரசியல் தீர்வு என்கிற சொல்லுக்கே சிங்களவர் வரலாற்றில் இடமில்லை என ஆப்பு வைக்கின்றன. இறுதியில் சந்திரிகா அம்மையார் யாரைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார் என, மிக இக்கட்டான கேள்வியொன்றையும் மகாசங்கத்தினர் எழுப்புகின்றனர். இதன் பொருள் என்ன ? 1978ஆம் ஆண்டு வெளியிட்ட தனது நூலான 'சிறீலங்கா - 3ஆம் உலக சனநாயகம்' என்பதில், பேராசிரியர் ஜேம்ஸ் யுப் இதனை விளக்குகின்றார்- ''சிங்கள அரசியலில் எவ்வித முடிவுகளையும் இரத்துச் செய்யும் (Veto group) குழுவாக மகாசங்கமே விளங்குகின்றது.''

இவ்வாறாக சிங்கள அரசியலில் பௌத்தமும் அரசாட்சியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, பௌத்த மகாசங்கத்திற்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் பிரிக்கமுடியாத உறவு ஏற்பட்டு, இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முண்டு கொடுக்கும் முன்னைய வரலாறே மகாவம்ச குறிக்கோளாறாக விரிகின்றது. இந்த மாறாத அடிப்படையே ஆங்கிலேயர் காலத்தில் பௌத்த மறுமலர்ச்சியாக, அநகாரிக தருமபாலவின் ''மண்ணின் மைந்தர்'' கருத்துருவமாக உருப்பெற்றது. ''சிங்கள பௌத்தருக்கு மட்டுமே நாடு உரியது'', ''துட்டகைமுனு பாரம்பரியமே இங்கு நிலைநிறுத்தப்படவேண்டும்'', ''சிங்கள இனம் என்பது, தொன்மை மிக்க வரலாற்றினம் பிறப்பித்த இனிமையான - பண்பான - ஆரியக் குழந்தைகள்'' என்றும்; தமிழர் என்பார் ''இந்த நாட்டை அழித்தனர்......தொன்மை விகாரைகளை நாசமாக்கினர். ஏறத்தாழ புராதன இனமொன்றை அழிக்கும் நிலைக்குச் சென்றனர்......'' என தருமபாலவின் கருத்தோட்டங்களே, இன்றளவும் நிலவும் சிங்கள அரசியலின் தலைவிதியைத் தீர்மானிக்கும் எல்லைக் கோடுகளாகும். 1931ஆம் ஆண்டு அவர் இறந்தாலும், அவரது கருத்தோட்டத்தைச் சிங்கள அரசியலிலே தாபனமயப்படுத்திக் காவிச் சென்ற பெருமை,



சந்திரிகா அம்மையாரின் பெற்றோரையே சாரும்.

அம்மையாரின் தந்தையோ, தனது காலத்தில் விகாரைகளில் முடங்கிக் கிடந்த 12 ஆயிரம் பிக்குகளையும் 'களனி ரஜ மகா விகாரை' பீடாதிபதி புத்தரகித்த தேரர் தலைமையில் 'எக்சத் பிக்கு பெரமுன' என பிக்குகள் முன்னணியாக்கி - அரசியல் மேடைகளிலே ஏற்றி, பௌத்த பிரிவேனாக்களையே வாக்கு வேட்டையாடும் தேர்தல் அலுவலகங்களாக்கினார். தாயார் சிறிமாவோ அம்மையாரோ அறுபதுகளில், தருமபாலவின் கருத்தைக் காக்கும் பாதுகாவலர் போர்வையைத் தன் மேல் போர்த்திக்கொண்டார். தனது ஆட்சிக்காலத்தில் - 1965 ஆம் ஆண்டு - அரசாங்கச் செலவிலே, கல்வி கலாசார அமைச்சுக்கூடாக ஆனந்தகுருகே என்பவரைக் கொண்டு, தருமபாலவின் எழுத்துக்களை நூல் வடிவிலிட்டார். ''நீதியானவற்றுக்கு திருப்புதல்'' ('Return to Righteousness' எனப் பொருத்தமாகத் தலைப்பிட்டார். எனவே சிங்களவர்க்கு நீதியானதைச் செய்யாமல் செல்வாவோடு உடன்பாடு செய்ய முயன்ற டட்லியின் டட்லி - செல்வா உடன்பாட்டிற்கு' எதிராக, மகாசங்கத்தை இலகுவில் சிறிமா திருப்பினார். எனவே, 1967 ஆம் ஆண்டு மே மாதமளவில் டட்லி - செல்வா உடன்பாட்டிற்கு மிகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த ராமண்ய நிக்காயாவின் மகாநாயக்கரை, ''தமிழர்கட்கு ஏதாவது பிடி இந்த நாட்டிலே கொடுத்தால் சிங்களவர் எல்லாம் கடலுக்குள் குதிக்கவேண்டியது தான்'' எனச் சொல்ல வைத்தார். எனவே, இந்தக் குரலின் மறுபதிப்பை- அதன் எதிரொலியை- கடந்த 5ஆம் திகதி மகாசங்க மாநாட்டில் 'பூமிபுத்திர' இயக்க ஸ்தாபகர் மாதுலுவாவே சோபித தேரர் ''சந்திரிகா அரசின் அமைதித் திட்டம் சிங்களவரைக் கடலுக்குள் தூக்கி வீசிவிடும்'' என எதிரொலித்தார். இவ்வாறு சிங்களத்தின் இற்றைய வரையிலான 2500 ஆண்டு வரலாறும் மறுபதிப்பாக- எதிரொலியாக மாறாத சிங்களப் பேரினவாதத்தின் தாழ்வுச்சிக்கலின் தடமாக - மாறிவிட்டது. எனவேதான் பொஸ்னிய சேர்பியர் குறித்தான வரலாற்று ஆசிரியரொருவரின் வர்ணிப்பு இப்போது, சிங்களவர்க்கும் மிகப் பொருத்தமாகிவிட்டது: ''அவர்கள் வரலாற்றினை மறக்கவுமில்லை; அதிலிருந்து புதிதாக எதையும் கற்கவுமில்லை.''

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், பழைய வரலாற்றின் ஒளித் தடங்களிலேயே பயணம் செய்து புதிய வரலாற்று உதயத்தைக் காணவேண்டும். மகாசங்கத்தை மீறமுடியாது என்பது தெரிந்திருந்தும், அவர்கள் ஆசியில்லாமல் ஒருநாள்தன்னும் தான் பதவியிலிருக்க முடியாது என்பதை உணர்ந்திருந்தும் - ஐ. தே. கட்சி ஒருபோதும் தனது திட்டங்களுக்கு - அது எதுவாக இருந்தாலும் - ஆதரவு தராது என்பது புரிந்திருந்தும் கொழும்பில் குந்தியிருந்து நாளைக் கழிக்கும் தமிழ்க் குழுக்களால் எவ்வித பயனுமில்லை என்பது அறியப் பட்டிருந்தும், மிக நுட்பமான முறையில் பரப்புரைகளை மேற்கொண்டு பாரிய போரொன்றையே தமிழ் மக்கள் மீது திணிக்க அம்மையார் முயல்வதை, எம் மக்களால் இலகுவில் அறியமுடியும். அதேவேளை, 'ஓடு மீன் ஓட உறுமீன் வரும்வரை' காத்திருந்த ரணில் ''யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கை''யைக் கண்டிப்பதும், இடம்பெயர்ந்த மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதுமான வழமையான அரசியல் வித்தைகளையும், எம்மக்களால் உணரமுடியும். சென்றமாதம் 22ஆம் திகதி 'சிறிகோதா'வில் ஐ. தே. கட்சியின் செயற்குழு - நாடாளுமன்றக் குழுவில் என்ன பேசப்பட்டது? ''அம்மையாரின் 'அமைதிப் பொதி'க்கு ஆதரவு கொடுக்கவேண்டிய தேவை எமக்கு எதுவுமில்லை; ஒற்றையாட்சி முறையில் எந்த மாற்றத்திற்கோ, வட-கிழக்கு இணைப்பு என்கின்ற பேச்சுக்கோ இடமில்லை''; ''இச்சட்ட வரைவினை ஆதரித்தால்'' அது சிங்கள பௌத்தருக்கு கட்சி செய்யும் மாபெரும் துரோகம்''; ''தமிழ் மக்கட்கு என்ன சிக்கல்? இல்லாத சிக்கலுக்கு எதற்கு தீர்வு?'' என்றே மூத்த கட்சி உறுப்பினர் உறுமினர். இவையெல்லாவற்றையும் தொகுத்த, சிங்களத்தின் மூத்த செய்தியாளர் மேர்வின் எழுதினார்: ''பொதுசன முன்னணி அரசின் தீர்வுத்திட்டமெனும் விமானத்தை எதிர்ப்பு எனும் தனது ஏவுகணைமூலம் ஐ.தே. கட்சி சுட்டு வீழ்த்திவிட்டது?'' எனவே, எம்மக்கள் மத்தியில் சில கேள்விகள் இப்போது எழுகின்றன. மகாசங்கமும் ஐ.தே. கட்சியும் ஆதரவு தரமுடியாதபோது எதற்கு இந்த ஏமாற்று வித்தை? ஒற்றையாட்சி முறை மாற்றப்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பூவரசு பூக்கும் பூமிக்கு வெள்ளரசு விலங்கிட முடியுமா?

அலரிமாளிகைக் கூரைமீதெழுந்து
அலைவரிசையில் மிதந்ததோர் அசரீரி.
"தமிழரின் மௌனம் கலையும் தருணமிது;
புலிகளுக்கெதிராக எல்லோரும் பேசவேண்டும்" -
சந்திரிகாவின் சத்திய வசனமிது.
பிரபாகரனுடன் பேசி
பிரச்சினைக்குத் தீர்வென்ற சீமாட்டிக்கு
இந்தவசனத்தை எழுதிக் கொடுத்தது யார்?
வாசல்தோறும் வாக்குக் கேட்டபோது
பேசியது என்ன?
காவியுடைகள் கூத்தாடத் தொடங்கியதும்
கூறுவது என்ன?
சூத்திரதாரி யாரென்று தெரிந்துவிட்டது.
மேசைக்குக் கீழே 'நீலனின்' கால்கள்.
வேறொன்றுமில்லை.
'கதிர்காமத் தம்பிரானின்' திருவோடு யாசகம்
உத்தமியை உரத்துப்பேச வைக்கிறது.
கொழும்பிற் தொங்கும் 'துரோகவெளவால்கள்'
சொன்னதைச் செய்யுமென்ற துணிவு
சந்திரிகாவைச் சண்டித்தனத்துக்குத் தூண்டுகிறது.
என்ன செய்வது?
எட்டப்பர்களால் இடிந்த வரலாற்றில்
இன்னொரு அத்தியாயம் இது.
சரி, சரி, கிடக்கட்டும்.
எரியுண்டு போகுமா எம்மண்?




- வியாசன்

நடவாது.
பூவரசு பூக்கும் பூமிக்கு
வெள்ளரசு வந்தா விலங்கிட முடியும்?
மழைநீரால் மட்டும் பயிர்செய்யும் பூமியிது
அசையாதென்பதறிக.
"பாறை பிளந்து பயனெடுக்கும்" தாய்வயிறு
பணியாதென்ப தெம் பாடல்.
ஒத்தியெடுத்து ஊற்றுவாய் அடைத்தாலும்
வேர்கசிந்து நீர்பரவும்.
எந்நாட்டு மக்களையும் எம்தேசம் வரவேற்கும்
படையோடு வருபவர்க்கெம் தலைவாசல் மரமிடிக்கும்.
'குமாரணதுங்காவின் குடும்பத் தலைவிக்கு'
யாரேனும் இதனை அறியக் கொடுத்திடுக.
மத்திய வங்கிமீது இடித்தவர் எவரோ?
ஆர் செய்தாரோ நாமறியோம் பராபரமே!
என்றாலும்
குண்டுவெடிப்பென்றால் என்னவென்று
கொழும்புக்கும் தெரியட்டும்.
குருதிவெள்ளம் கொழும்பில் வழியும் போதே
அவலமென்றால் என்னவென்று அரசுக்குப்புரியும்.
'நவாலிப் படுகொலையும்'
'நாகர்கோவிலில்' நாம் கொடுத்த விலையும்
சந்திரிகாவின் சமையலறைக்குத் தெரியாது.
'சிலிங்கோ மாளிகை'ச் சிதறல்கள்
'ஜனாதிபதி இல்லத்திலும்' விழுந்திருக்கும்
எடுத்துப் பார்த்தாவது எம்துயர் அறியட்டும்.
வலிகாமம் போனதால்
நாம் மனம் இடிந்துபோகவில்லை.
புலிவாலைப் பிடித்தோமென்று பேசுவதும்
எமக்குக் கோபமல்ல.....
இளித்தவாய்த் தமிழருக்கு
அள்ளிக் கொடுக்கவந்த 'அமுதசுரபி'யென்று
தீர்வொன்றைச் சொல்வதே சினமூட்டுகிறது.
பிறந்தமண்ணில் வாழப் "பெமிசன்" எடுப்பதிலும்
இறந்துபடல் சிறந்தது.
திணிப்புக்குப் பெயர் தீர்வு என்றால்
தீர்வுக்கு சிங்களத்தில் என்ன பெயர்?
நேற்றுவரை
அதிகாரமட்டத்திருந்த ஆதிக்கவுணர்வை
"வெள்ளைப்புறா"மூலம் வீதிக்குக் கொண்டு வந்ததே
சந்திரிகாவின் சாதனை அரசுதான்
ஆளவந்தவன் சிங்களவன்
அடிமையானவன் தமிழனென்று
பேசவைத்த பெருமையும் பெருமாட்டிக்கே சேரும்
பேச்சுவார்த்தை மேசையின் கால்களை முறித்து
வெட்டரிவாளுக்குப்பிடிபோட்ட "வெண்புறாவே"
ஒன்றுணர்க.
கருங்கல்லு உடையுமன்றி வளையாது.
கண்ணாடி சிதறுமேயன்றி நெளியாது.
இது உணர்ச்சிவசமான உரையல்ல...—
பிரபாகரனின் "பொலிஸி."
"புலிகளை
சித்திரைக்கிடையில் தீர்த்துக் கட்டுவேன்" என்றார்
ரத்வத்தை.
முடிசூடிய மன்னனுக்கு தலைபிசகிய கதைபோல
மந்திரி மாமனுக்கு மாதங்கள் மறந்து போச்சு.
தேரும், குதிரைகளும், சிம்மாசனக்கதிரையும்
மாப்பிள்ளை மிடுக்கானது மந்திரிக்கு—
'தமிழர்தொட்டழிப்பை' முடுக்கிவிட்ட 'அக்காவுக்கு'
அடியடங்கும் வயதில் ஆயுர்வேதவைத்தியம்.
தம்பியானவன் தலைக்குத் தடவடா புளியெண்ணை.
கோட்டையைப் பிடித்துக் கொடியேற்றி வைத்துவிட்டு
வேட்டை நாய்களுக்கு விருந்து வைத்தபோது......
புலிகளை அழிக்காதுவிடேன் என்று
புலம்பியதாய் அறிந்தோம்.
காற்றுலவும் வெறும் தரையில் காலைவைத்துவிட்டு
பீற்றிக் கொள்ளும் 'பெருந்தகையே'
தமிழரின் உதிரத்துளி ஒவ்வொன்றுக்கும்
பதிவேட்டில் வரவுண்டு.
காலமொருநாள் கணக்குக் கேட்கும்.
சத்தியத்தை வெட்டியழித்து விடுவதென்பது
நிச்சயம் நடவாது.
புத்தபிரான் சொன்னதிந்தப் போதனை
தாமரைத் தட்டேந்தும் தளபதிகளுக்கு
இதைப்போதிக்க யாருமேயில்லையா?
புலிகள் வேறு தமிழர் வேறு என்பவர்களே
புரிந்து கொள்ளுங்கள்
வலிகாமம் வெளியேறியபின் எத்தனை வாக்குறுதிகள்
ஒருவராயினும் உள்ளே வந்தார்களா?
ஆயிரம் முரண்பாடுகள் எமக்குள் இருந்தாலும்
அண்ணன் தம்பி உறவெமக்கு
ஒன்றென்றால் துடிக்கும் உதிரத்துடிப்பு
விடிழந்து போன "வெப்பிசாரத்தில்"
யாராயினும் ஓரிருவர் பேசியிருக்கலாம்
அதைவைத்தா முடிவெடுத்தீர்?
அட பாவமே!
நெருப்புக்குளித்தும் நிமிரும் திறன்படைத்த
கறுப்புப் பறவைகள் நாம்.
மானமிழந்து மாற்றானின் மடிகிடக்கும்
ஈனர்சிலரிங்கே இன்னும் இருக்கின்றார்
நீலன்,
கதிர்காமர்,
சிவசிவா —— இப்படியாய்——
தலையில் ஓரிரண்டு நரைமயிர்போல
இவர்கள் சிலபேர்கள்.
எச்சிலிலைகளையே எதிர்பார்க்கும் இவர்களையா
தமிழரென நம்பித் தடம் புரண்டீர்
ஒன்றுரைத்தோம்.
எம்மண்ணில்
வேரைத்தறித்தால் விழுதிருந்து துளிர்த்திடுவோம்.
விழுதைத்தறித்தாலோ வேரிருந்து தளிர்த்திடுவோம்.
காற்று மீதாணை,
கடல் மீதாணை,
போற்றுதற்குரிய நம் பொன்மண்மீதாணை.
ஆற்றலன் எம்தலைவன்,
அண்ணல்மீதாணை.
படைதிரட்டி உடன் எழுவோம்.
பகையழித்து ஊர் புகுவோம்.

# 900 நாட்கள்

## ஒரு முற்றுகைச் சமரும் வெற்றிகொள்ளப்பட்ட விதமும்


ரஷ்யாவை ஆட்சிசெய்த மகாபீற்றர் என்னும் அரசரால் 1703 ஆம் ஆண்டு, பால்டிக் கடலின் கரையோரத்தில் அமைக்கப்பட்ட பெரும் நகரமே சென் பீற்றர்ஸ்பேர்க் ஆகும். பயனற்றுக் கிடந்த பெரும் சதுப்பு நிலப்பரப்பில் இந்நகரம் அமைக்கப்பட்டது. இந்த நகரை அமைக்கும் முயற்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நோயினாலும், விபத்துக்களாலும் இறந்தனர். 1712 லிருந்து 1918 வரை இந் நகரமே ரஷ்யாவின் தலைநகரமாக இருந்தது. 1917 ஒக்ரோபர் புரட்சியின் பின் இந்நகரை லெனின்கிராட் என அழைத்தனர். தற்போது இந்நகரம் மீண்டும் சென் பீற்றர்ஸ்பேர்க் என அழைக்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப்போரின்போது ஜெர்மனியரால் லெனின்கிராட் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது (செப். 8, 1941 - ஜன 27, 1944). 900 நாட்கள் என அழைக்கப்படும் இம் முற்றுகையின் தொடக்கத்தில் இந்நகரில் ஏறத்தாழ முப்பது லட்சம் மக்கள் வாழ்ந்தனர். முற்றுகையினால் பதினைந்து லட்சம் ரஷ்யர்கள் இறந்தார்கள். இவர்களில் எட்டு லட்சம் மக்கள் பிஸ்கர்வஸ்கி என்னும் இடத்தில் புதைக்கப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. இதை லெனின்

*ஜெர்மனியப் படைகளால் லெனின்கிராட் நகரம் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது. அங்கே 30 லட்சம் மக்கள் வசித்தனர். முற்றுகையை உடைக்க அணிதிரளுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, அந்நகரின் 5 லட்சம் மக்கள் படையில் சேர்ந்தனர்.*

கிராட்டில் வாழ்ந்த கவிஞரான சேர்கி டேவிடோவு, ''நகரின் அரைவாசி இங்கேதான் உறங்குகின்றது'' எனக் குறிப்பிட்டுள்ளார் (''Here lies half the city''). முற்றுகையின் போது ஏழு லட்சம் வீடுகள் அழிக்கப்பட்டன. நகருக்கு ஏற்பட்ட இழப்பு நாலாயிரத்து ஐநூறு கோடி ரூபிள்களாகும்.

எழுத்தில் வடிக்க முடியாதளவு அழிவுகளைச் சந்தித்தபோதும் - தனயான உணர்வோடு தலை தாழ்த்த மறுத்து - பெரும தறல்காடை செய்து லெனின்கிராட் மக்கள போராடினர்; வரலாறறில அழியாத இடததைப் பெறறுக் கொண்டார்கள.



1941 ஆம் ஆண்டு யூன் திங்கள் 21 ஆம் நாள் ஜெர்மனி ரஷ்யாமீது போர்தொடுத்தது. இதை நடவடிக்கை 'பார்பரோசா' என ஜெர்மனி அழைத்தது. முதல்நாள் சமரில் ரஷ்யா ஆயிரத்து இருநூறு (1200) வானூர்திகளை இழந்தது. இதில் தொள்ளாயிரம் தரையிலேயே அழிக்கப்பட்டன. பதினெட்டு நாட்களுள் ஜெர்மனியப் படை முந்நூறு மைல்களைக் கடந்து முன்னேறியது. ரஷ்யாவின் இருபத்தெட்டு டிவிசன்களைச் சேர்ந்த நாலு லட்சத்து இருபதினாயிரம் (4, 20, 000) படையினர் முற்றாக அழிக்கப்பட்டனர்; மேலும் எழுபது டிவ்சன்கள் தம பலத்தில் அரைவாசியை இழநதன.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவை ஜெர்மன் படையணி விரைவாக நெருங்கியது. ஜெர்மனியின் தலைவரான கிட்லர் மொஸ்கோவைக் கைப்பற்றுவதற்கு முன்பு உக்கிரேன், கோர்கஸ் பகுதிகளையும் லெனின்கிராட்டையும்கையகப்படுத்ததிடீரெனமுடிவெடுத்தார். லெனின்கிராட்டைக் கையகப்படுத்துவதன்மூலம் பின்லாந்துடன் தொடர்பை ஏற்படுத்த முடியும்; பால்டிக் கரையைக் கட்டுப்படுத்த முடியும்; இதன்மூலம் ரஷ்ய கடற்படையைச் செயலிழக்கச் செய்யமுடியும். கிட்லரின் இம்முடிவு, அவர் விட்ட பெரும் தவறுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

லெனின்கிராட்டை முற்றாக அழித்துவிடும்படி கிட்லர் கட்டளையிட்டார். அத்துடன், அந்நகர மக்கள் சரணடைய முயன்றால் அதை ஏற்க வேண்டாம் எனவும் தம் படையினருக்குக் கட்டளையிட்டார்.

ஜெர்மனியின் வேகமான முன்னேற்றத்தைத் தடுத்துநிறுத்தப் போதிய படைபலம் இல்லாத நிலையில், லெனின்கிராட்டைக் காக்க பொது மக்கள் அணிதிரளுமாறு அழைக்கப்பட்டனர். ஐந்து லட்சம் மக்கள் அணிதிரண்டு பங்களித்தனர்; இதில் பெண்களும் பதினான்கு வயதை நிரம்பிய சிறுவர்களும் அடங்குவர்.

ஒரு வாரத்தினுள் மட்டும் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் மக்கள் அணிதிரண்டனர்; இதில் முப்பத்திரண்டாயிரம் பேர் பெண்கள்.

யூலை 10 ஆம் நாள் பொதுமக்களிலிருந்து அணிதிரட்டப்பட்ட முதலாம் டிவிசன் போர்முனைக்குச் சென்றது. பலரிடம் துப்பாக்கி இருக்கவில்லை; மண்வெட்டி, கோடரி என அகப்பட்ட கருவிகளைத் தாங்கியவண்ணம் இவ்வணி போர்முனைக்குச் சென்றது.

மெகா (Mega), சிலிசெல்பேர்க் (Shlisselburg) ஆகிய பகுதிகளை ஜெர்மனி கையகப்படுத்தியதும், லெனின்கிராட்டுக்கும் ரஷ்யாவின் ஏனைய பகுதிகளுக்கும் இருந்த தரைவழித் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது; தொள்ளாயிரம் நாள் முற்றுகை தொடங்கியது.

லெனின்கிராட்டுக்கும் மற்றைய ரஷ்யப் பகுதிகளுக்கும் இடையே வான்மூலமும், லேடோகா (Ledoga) ஏரிமூலமும் மட்டுமே தொடர்பிருந்தது.

செப்ரெம்பர் திங்களில் லெனின்கிராட்டில் இருந்த முப்பது லட்சம் ரஷ்யர்களுக்கு (இதில் ஐந்து லட்சம் படையினரும் அடங்குவர்), முப்பது நாட்களுக்கு மட்டுமே போதுமான உணவிருந்தது.

நொவெம்பர் 20 ஆம் நாளிலிருந்து, தொழிலாளி ஒருவருக்கு நாளொன்றிற்கு 250 கிராம் உணவும் மற்றையோருக்கு 125 கிராம் உணவும் மட்டுமே வழங்கப்பட்டது. முன்னணிப் படையினருக்கு 500 கிராமும் பின்னணியில் செயற்பட்ட படையினருக்கு 300 கிராமும் வழங்கப்பட்டது.

அகப்பட்டதை எல்லாம் மக்கள் சாப்பிட்டார்கள். நாயிலிருந்து, சுவரில் ஒட்டப்பட்ட பேப்பரிலிருந்த மா வரை சாப்பிட்டார்கள். ஒரு முறை, ஒரு படைவீரனிடம் இருந்த தோற்பெட்டியைக் கேட்டு வாங்கிய ஒரு பெண், அடுத்தநாள் அவனுக்கு அத்தோலில் ஜெலி செய்து அனுப்பியிருந்தார்.

*செப்ரெம்பர் தீங்களில் லெனின்கிராட்டின் 30 லட்சம் மக்களுக்கும் 30 நாட்களுக்குத் தேவையான உணவே இருந்தது. அகப்பட்டதை எல்லாம் அவர்கள் சாப்பிட்டார்கள். ஒரு படைவீரனிடம் இருந்த தோற்பையைக் கேட்டு வாங்கிய ஒரு பெண், அடுத்த நாள் அத்தோலில் ஜெலி செய்து அவனுக்கு அனுப்பிவைத்தார்.*

நாளொன்றுக்கு மூவாயிரம் மக்கள் உணவின்றி மடிந்தார்கள்; இதைத் தவிர எறிகணை வீச்சில், வான் தாக்குதலில் கொல்லப்பட்டோர் பலர். வீதிக்கு வீதி பிணங்கள் கிடந்தன; அந்தப் பிணங்களை மூடி பனி பெய்தது. பனிக்காலம் முடிய பனி உருகத் தொடங்கிய போதே, வீதியில் பிணங்கள் பல அகற்றப்படவில்லை- அவற்றை மூடிய பனியின் மேலால் நாம் நடந்து சென்று வந்திருக்கின்றோம் என, மக்கள் உணர்ந்தார்கள்.

தனியா என்ற பதினொரு அகவை நிரம்பிய சிறுமியின் நாட்குறிப்பில், ''சென்யா 28, டிசெம். 41 இல் இறந்தார். பபுஸ்கா 25, ஜன. 42 இல் இறந்தார். லேகா 17, டிசெம். இறந்தார். அம்மா 13, மேயில் இறந்தார். எல்லாரும் இறந்துவிட்டனர்; நான் மட்டும் இருக்கின்றேன்'' என எழுதப்பட்டிருந்தது. அச் சிறுமியும் 43 ஆம் ஆண்டு நோயினால் இறந்துபோனாள்.

வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சி தர வந்த கவிஞர்கள், பாடகர்கள் பலர் நிற்பதற்கு இயலாதவர்களாக இருந்தார்கள். நம்பிக்கையூட்டும் வகையில் நிகழ்ச்சிகளைத் தந்த அவர்களில் பலர், அடுத்த சிலநாட்களில் இறந்துபோனார்கள். எரிபொருள் இன்மையால் வானொலிச் சேவை தடைப்பட்டபோது மக்கள் குழப்பமடைந்தார்கள். ''எமக்குத் தரப்படும் சிறு உணவுப் பங்கீட்டை வேண்டுமானால் தருகின்றோம்; வானொலியை நிறுத்தாதீர்கள். அதுவே எம் இருப்புக்குத் துணை'' என வானொலி நிலையத்திற்குச் சென்று கூறினர்.

மிகப் பெரிய இன்னல்களுக்குள்ளும் லெனின்கிராட் மக்கள் போராடத் தயங்கவில்லை; உணவு முற்றுகையை உடைக்க முயன்றனர். லேடோகா ஏரி நூற்றிருபத்தைந்து மைல் நீளமும் எண்பது மைல் அகலமும் கொண்டது. இதுவே ஐரோப்பாவிலிருக்கும் மிகப் பெரிய நன்னீர் ஏரியாகும். நொவெம்பரில் இவ்வேரி குளிர்காரணமாக உறையத் தொடங்கும். ஐந்து அங்குலத் தடிப்பளவுக்கு இந்நீரேரி உறைந்ததும் அதன் வழியாக, குதிரைகளால் இழுக்கப்படும் சறுக்கூர்திகள்மூலம் உணவு கொண்டு வரும் முயற்சி தொடங்கியது. பனிக்கட்டியின் தடிப்புக் கூடியதும் லொறிகள்மூலம் உணவு எடுத்துவரப்பட்டது. ஜெர்மனியரின் வான் தாக்குதலால் பல லொறிகள் அழிந்தன; பல வழியில் புதையுண்டன. உணவு எடுத்துவரும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, லெனின்கிராட்டில் இருந்து போராட்டத்தில் பங்களிக்க முடியாத மக்கள் அகற்றப்பட்டார்கள்; ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகற்றப்பட்டார்கள்.

உணவு நிலை சற்று முன்னேற்றமடைந்ததும், 42 ஆம் ஆண்டு ஏப்ரில் திங்களில் இருந்து, மூன்று லட்சம் மக்கள் லெனின்கிராட்டை துப்புரவு செய்யும் பணியில் இறங்கினார்கள். நீண்ட நாட்களின் பின் ஏப்ரில் திங்களில், நூறுக்கு மேற்பட்ட கார்கள் வீதியில் ஓடத்தொடங்கின. அவற்றைக் கண்டதும் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை; கார்க் 'கோணின்' ஒலியைக் கேட்ட ஜெர்மனியப் படையினர் நம்பிக்கை இழந்தனர்.

ஜெர்மனியர் லெனின்கிராட்டைக் கையகப்படுத்தும் நிலை வந்தால் அந்நகரை முற்றாக அழிக்கும் வகையில், எல்லா இடங்களிலும் வெடிப்பொருள்கள் வைக்கப்பட்டன. மிகுந்த இழப்புக்களுடன் ஜெர்மனியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திய ரஷ்யர்கள், எதிர்த் தாக்குதலைத் தொடங்கினர். முற்றுகையின் ஐநூற்று ஆறாம் நாள் சிலிசெல்பேர்க்கை ரஷ்யர்கள் மீண்டும் வெற்றிகொண்டதையடுத்து, முற்றுகை ஓரளவு தளர்த்தப்பட்டது.

1944 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், ரஷ்யா மிகப்பெரிய அளவில் எதிர்த் தாக்குதலைத் தொடங்கியது ஜெர்மனியர்களை மிகவும் அச்சுறுத்திய ரஷ்யாவின் 'கத்தூசா பீரங்கிகள்', அறுபத்தைந்து நிமிடங்களுக்குள் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட எறிகணைகளை ஜெர்மன் நிலைகள் மீது வீசின. பெரும் சமரைத் தொடர்ந்து ஜனவரி 27 ஆம் நாள், முற்றுகை முடிவுக்கு வந்தது.

1945 ஆம் ஆண்டு, லெனின்கிராட் மக்களுக்கு, அவர்களின் வீரத்திற்கு லெனின் விருதையும்; 1965 ஆம ஆண்டு, வீரர்கள் நகரம்' என்ற விருதையும் ரஷ்ய அரசு வழங்கியது.

முற்றுகையின்போது இறந்த மக்கள் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுக் கல்லை வணங்கி ரஷ்யக் கவிஞர் ஒருவர் எழுதிய வரிகள், அம் மக்களின் வீரத்தை உணர்வோடு எடுத்துக் காட்டுகின்றன:

''லெனின்கிராடே
புரட்சியின் தொட்டிலே!
உன்னைக் காக்க
உயிர்தந்த உன்மக்கள்
உறங்கும் இடமிது.
நடுகல்லால் பூசிக்கப்பட்டு
என்றுமழியாது கல்லறைகளின் கீழ்
உறங்கும் இவர்கள் தற்கொடையை
அளவிட முடியாது!
இவர்களை -
இவர்கள் செயல்தனை என்றுமே
மறக்க முடியாது!'' o

# திரவப் பண நெருக்கடி

## திரவப் பணம் என்றால் என்ன? இந்த நெருக்கடிக்கு தீர்வு என்ன?

சி. வரதராஜன்

சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் இராணுவ அடக்குமுறைகளுக்கும் மேலாக நடைமுறைப்படுத்திவரும் பொருளாதாரத் தடையின் ஒரு அங்கமாக, வடபகுதிக்குக் கொண்டுவரப்படும் திரவப் பணத்திற்கு அண்மைக் காலங்களில் கட்டுப்பாட்டினை விதித்துள்ளது. கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பொதுவான பரிமாற்ற ஊடகமே பணம் எனப்படும். இன்று பொதுவாகப் பணமாகப் பயன்படுத்தப்படுபவை சட்டப்பணம், வங்கிப்பணம் என்பனவாகும். சட்டப்பணம் என்பதுதான் உலோக, கடதாசி நாணயங்களைக் குறிக்கின்றது; இவை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்றன. இந்த நாணயங்களே திரவப் பணம் ஆகும். அதாவது, சாதாரண வழக்கில் காசு என அழைக்கப்படுவதே பொருளியலில் திரவப் பணம் என அழைக்கப்படுகின்றது. வங்கிப்பணம் என்பது வணிக வங்கிகளினால் உருவாக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்கு வைப்புக்களை (காசோலைகளை) குறிக்கின்றது.

மத்திய வங்கியால் வெளியிடப்படுகின்ற திரவப் பணம் (தாள், உலோக நாணயங்கள்) அரசாங்கம், வணிக வங்கிகள் என்பவற்றின் ஊடாகப் பொதுமக்களின் கைகளுக்கு - அதாவது சுற்றோட்டத்திற்கு - வருகின்றது. அரசாங்கம் தனது ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் பொருட்கள், சேவைகளின் கொள்வனவுகள் என்பவற்றை உள்நாட்டில் மேற்கொள்ளும்போது, திரவப் பணம் புழக்கத்திற்கு (சுற்றோட்டத்திற்கு) வருகின்றது. இவ்வாறு மக்களின் கைகளுக்கு வருகின்ற திரவப் பணத்தின் ஒரு பகுதியினை மக்கள் வணிக வங்கிகளில் வைப்புச் செய்கின்றனர். வணிக வங்கிகள் தம்மிடம் வருகின்ற வைப்புக்களை அடிப்படையாகக்கொண்டு, வாடிக்கையாளர்களுக்குக் கடன்களை வழங்குகின்றன. வணிக வங்கிகளின் கடன் வழங்கும் நடவடிக்கைகள் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவினை, அதாவது பணநிரம்பலை அதிகரிக்கச் செய்யும்.

பணப்புழக்கத்தின் செயற்பாட்டினைப் பின்வரும் உதாரணத்தின்மூலம் எளிமையாக விளங்கிக்கொள்ள முடியும். சேகர் என்பவர் தன்னிடமுள்ள 10.000 ரூபா திரவப் பணத்தைக் கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படுத்துவாரேயானால், புழக்கத்தில் 10,000 ரூபா இருக்கும். மாறாக சேகர் தனது 10.000 ரூபாவினை வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கு வைப்பிலிட்டு காசோலைகள்மூலம் தனது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது, 10,000 ரூபா திரவப் பணம் வங்கியிலிருக்கும்; ஆனால், அதன் பெறுமதிக்குச் சமனான காசோலைகள் புழக்கத்திலிருக்கும். தற்போது வங்கி தன்னிடமுள்ள 10,000 ரூபா வைப்பிலிருந்து 8,000 ரூபாவினை காந்தரூபன் என்பவருக்கு கடனாக வழங்குகின்றது. இப்போது வங்கியின் கடனால் புதிதாக 8,000 ரூபா புழக்கத்திற்கு வருகின்றது. இதன் மூலம் 18,000 ரூபா புழக்கத்தில் இருக்கின்றது எனலாம். வங்கியின் "அனைத்து வைப்பளார்களும் ஒரே நேரத்தில் வந்து தமது வைப்புக்கள் அனைத்தையும் மீளளிக்கும்படி கேட்கமாட்டார்கள்" என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வங்கிகள் தமது வைப்புக்களில் ஒருபகுதியினைக் கடனாக வழங்கும்போது, பணம் உருவாகுவதனை அவதானிக்கலாம். வணிக வங்கிகளின் இச்செயற்பாட்டை பொருளியற் கருத்தில், 'வணிக வங்கிகள் பண ஆக்கம் செய்கின்றன" எனக் கூறுவர். எனவே இங்கு, மத்திய வங்கியால் உலோக தாள் நாணயங்களும் (திரவப் பணம்) வணிக வங்கிகளினால் உருவாக்கப்படும் காசோலைகளும் (வங்கிப்பணம்) பணமாக இயங்கி வருவதனை அவதானிக்கலாம்.

**சாதாரண வழக்கில் காசு என அழைக்கப்படுவதே பொருளியலில் திரவப் பணம் என அழைக்கப்படுகின்றது.**

இலங்கையில் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவில் (பணநிரம்பலில்) ஏறத்தாழ 53- 54 சதவீதம் நாணயங்களாயும், 46 - 47 சதவீதம் காசோலைகளாயும் உள்ளன. எனினும், நன்கு வளர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில், பணநிரம்பலில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை காசோலைகள் வகிக்கின்றன.

மேலே கூறிய விளக்கத்தினைப் பின்னணியாகக்கொண்டு, வடமாகாணத்தில் நிலவும் திரவப் பண நெருக்கடியினை விளங்கிக்கொள்ள முடியும். வடமாகாணத்தில் இயங்கும் அரச, தனியார் வணிக வங்கிகள் பெருமளவில் வைப்புக்களைத் திரட்டியிருந்தபோதிலும், கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இவ்வங்கிகள், தமது தலைமைப்பீடம் விதிக்கும் கட்டுப்பாடுகளினால், கடன் வழங்கும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியிருந்தன. எனவே, மக்கள் தமது பணத்தினை வைப்பிலிடுவதும் பின்னர் அதனை மீளப் பெறுவதுமான செயற்பாடுகளே வங்கிகளில் நடைபெற்றன; கடன் வழங்கும் தொழிற்பாடு பெருமளவிற்கு நின்றுபோயிருந்தன. இந்நிலையில் இவ்வங்கிகளால் திரட்டப்பட்ட வைப்புத்தொகை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள வங்கிகளில் சிங்கள மக்களுக்குக் கடன்களாக வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு முடிவில், வடமாகாணத்தில் இயங்கிய கிராமிய வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் 8029 கோடி ரூபாவாகும். ஆனால், 1994ஆம்ஆண்டு இவ்வங்கிகள் வழங்கிய கடன் 332 கோடி ரூபா மட்டுமே. எனவே, மிகுதித் தொகையான 7697 கோடி ரூபா எங்கே? இத்தொகை எமது பிரதேசத்திற்குள்ளேயே இருந்திருக்குமேயானால், அரசாங்கத்தின் திரவப் பணக் கட்டுப்பாடு எம்மைப் பெரிதும் பாதித்திருக்க மாட்டாது. தமிழரின் சேமிப்பு சிங்களவருக்கு முதலீடாக மாறுகின்றது என்பதனைத்தான் இது காட்டுகின்றது. எனவே, இங்கு இயங்கும் வங்கிகள், தமிழ்ப் பிரதேசங்களில் சேமிப்பினைத் திரட்டி சிங்களப் பிரதேசங்களுக்கு முதலீட்டை வழங்கும் தரகு நிறுவனங்களாகவே செயற்பட்டுவருகின்றன.

**இலங்கையில் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவில் (பணநிரம்பலில்) ஏறத்தாழ 53-54 சதவீதம் நாணயங்களாயும் 46 - 47 சத வீதம் காசோலைகளாயும் உள்ளன எனினும், நன்கு வளர்ச்சியடைந்தஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில், பணநிரம்பலில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை காசோலைகள் வகிக்கின்றன.**

'சூரியப் பிரகாச' இராணுவ நடவடிக்கையின் விளைவாக தமது வருமான மூலங்களை இழந்த மக்கள், வங்கிகளிலிருந்த தமது சேமிப்புக்களை மீளப்பெறுவதில் ஆர்வம் காட்டினர்.

### போரும் பொருளாதாரமும்

போதிய திரவப் பணக் கையிருப்பினைக் கொண்டிராத வங்கிகள், தலைமையகத்திலிருந்து திரவப் பணத்தை (முன்னர் இங்கிருந்து அனுப்பிய பணத்தை) வரவழைக்க முயன்றபோது, அரசாங்கம் அதற்குத் தடை விதித்தது. வைப்பாளர்களின் காசுத் தேவையினைப் பூர்த்திசெய்ய முடியாத நிலைக்கு வங்கிகள் தள்ளப்பட, காசோலைகளை மக்கள் ஏற்க மறுத்தனர். இதன் விளைவாக காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்பட, திரவப் பணத்திற்கான தேவை மேலும் அதிகரித்தது. திரவப் பணம் போதியளவு இல்லாத நிலையில் சம்பளம், மற்றும் இளைப்பாற்றுச் சம்பளம் போன்றவற்றைத் திணைக்களங்கள் காசோலைகளாக வழங்க முற்பட்டன. இவற்றுக்கான திரவப் பணத்தை அனுப்புவதில் அரசாங்கம் காலதாமதத்தை ஏற்படுத்தவே, திரவப் பண நெருக்கடி மேலும் அதிகரித்தது. இது போதாதென்று வவுனியா தடைமுகாம் இராணுவம், வடபகுதிக்குள் வருபவர்கள் கொண்டுசெல்லக்கூடிய பணத்தின் அளவுக்கும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து திரவப் பணப் பற்றாக்குறையினை ஏற்படுத்திவிட்டன.

**1994 ஆம் ஆண்டு முடிவில், வடமாகாணத்தில் இயங்கிய கிராமிய வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த வைப்புகள் 8029 கோடி ரூபாவாகும். ஆனால், 1994 ஆம் ஆண்டு இவ்வங்கிகள் வடமாகாணத்தில் வழங்கிய கடன் 332 கோடி ரூபா மட்டுமே. எனவே மிகுதித் தொகையான 7697 கோடி ரூபா எங்கே?**

இந்தத் திரவப் பண நெருக்கடிக்குத் தீர்வு என்ன? அது அடுத்த இதழில்..... ○

## மத்திய வங்கி

நாட்டின் நிதியமைப்பின் தலைமை நிறுவனமான இலங்கை மத்திய வங்கி, 1950 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 28 ஆம் திகதி தனது தொழிற்பாட்டை ஆரம்பித்தது. இலங்கை மத்திய வங்கி பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

1. **நாணய வெளியீடு –** நாட்டின் சட்டப்பணமான தாள், உலோக நாணயங்களை வெளியிடும் அதிகாரங்கொண்ட ஒரேயொரு நிறுவனம் மத்திய வங்கியாகும்.
2. **அரசாங்கத்தின் வங்கி -** அரசாங்கத்தின் பொருளாதார, நிதி ஆலோசகராக விளங்குவதுடன் அரசின் படுகடனை நிர்வகித்தல், அரசின் கணக்குகளை முகாமைப்படுத்துதல், நாணயமாற்று வீதத்தினை நிர்வகித்தல் ஆகியவற்றையும் இது மேற்கொள்கின்றது.
3. **வங்கிகளின் வங்கி –** வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும் நிறுவனமாகவும் (தீர்வகமாகவும்), வங்கிகளின் நிதி இருப்பினைப் பாதுகாக்கும் வகையில் இறுதிக் கடன் வழங்கும் நிறுவனமாகவும் இது தொழிற்படுகின்றது.
4. **நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் –** நாட்டின் பணநிரம்பலை ஒழுங்குபடுத்தும் வகையில் வங்கிகளின் கடன்களைக் கட்டுப்படுத்துதல்.



கப்டன் அகத்தி
( இராமநாதன் நடராசா )
அம்பாறை.
25. 10. 1970




கப்டன் சிறைவாசன் / திலிப்
( நாராயணப்பிள்ளை
விக்னேஸ்வரன் )
மட்டக்களப்பு.
19. 09. 1974



கப்டன் ஜீவன் / தனகரன்
( கணபதிப்பிள்ளை
இராமனேஸ்வரன் )
மட்டக்களப்பு.
01. 01. 1971



கப்டன் ஈழவன்
( திருச்செல்வம் ரொபேட்சன் )
யாழ்ப்பாணம்.
23. 07. 1973



லெப். தொண்டன்
( இராசரத்தினம் கிருஷ்ணராஜ்)
யாழ்ப்பாணம்.
16. 04. 1976



லெப். தங்கத்துரை / இராகுலன்
( சிவரத்தினம் காந்தரூபன் )
யாழ்ப்பாணம்.
02. 03. 1976

வரலாறு காணாத 'சூரியப் பிரகாச' யாழ்ப்பாணப் படையெடுப்பை எதிர்கொண்ட பெருஞ் சமரின்போது -

எதிரிக்கு களத்தில் பேரழிவை ஏற்படுத்துவதுடன், சமர் முனையிலிருந்து அவனது பலத்தைச் சிதறடிக்கச் செய்யும் தந்திரோபாயத்திற்காகவும் -

பலாலிப் பெருந்தளத்தின் மீது, ஊடுருவித் தாக்கும் நுட்பமான கரும்புலி நடவடிக்கை ஒன்று நிகழ்த்தப்பட்டது.

ஒக்ரோபர் 29 ஆம் நாள், விடிகாலை இருளில், அளவெட்டிப் பகுதியில் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் 11 கரும்புலி வீரர்கள் களப்பலியாகினர்.



லெப். கலைச்செல்வன்
( ஆறுமுகம் சந்திரகுமார் )
அளவெட்டி.
15. 08. 1974



லெப். சசிக்குமாரன்
( செல்வராசா ரொபின்சன் )
யாழ்ப்பாணம்.
05 06. 1977



லெப. வேணுதாஸ்
( கந்தப்போடி தருமன்)
மட்டக்களப்பு.
22 01. 1973



லெப் நளினன் / கோவிந்தன்
( திசநாயகம் உதயதாசன் )
அம்பாறை.
27. 11. 1976



2ஆம் லெப். இசைச்செல்வன்
( நாகராசா சண்முகசீலன் )
யாழ்ப்பாணம்
01. 01. 1978

## ஏவுகணை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது, இதனால் பசுபிக் சமுத்திரத்தில் ஒரு இராணுவக் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. 140 போர் விமானங்களுடன் இரண்டு விமானந்தாங்கிக் கப்பல்கள், மற்றும் நாசகாரிகள் - சண்டைக் கப்பல்கள் உட்பட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கக் கடற்படையினர் தாய்வானுக்கு அருகே நிலைகொண்டுள்ளனர்.

தாய்வான் கடல் எல்லைக்குள் அமெரிக்கக் கடற்படை நுழைந்தால் அதன்மீது தாக்குதல் நிகழ்த்தப்படும் என்று, சீன அரசு எச்சரித்துள்ளது; சீனப் படை தாய்வானைத் தாக்கினால் அமெரிக்கக் கடற்படை தாய்வான் இராணுவத்திற்கு உதவி வழங்கும் என்று, அமெரிக்கா கூறியுள்ளது. விமானந்தாங்கிக் கப்பல்கள் தொடர்பாக ஒரு செய்தியாளர் வினவியபோது, ''தேவை ஏற்படும்போது பயன்படுத்தவே'' என, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் வாரன் கிறிஸ்தோபர் கூறியிருக்கிறார்.

இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தாய்வானிடம் நான்கு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் ( 4, 68, 000 ) படையினர் உண்டு. அமெரிக்காவின்சக்திவாய்ந்த எஃவ்-16 சண்டை விமானங்களைத் தயாரிக்கும் நிறுவனத்திடமிருந்து 150 விமானங்களைக் கொள்வனவுசெய்ய, தாய்வானிய அரசு முயன்றுள்ளது; இதற்கு அமெரிக்க செனேற்றும் பச்சைக்கொடி காட்டியுள்ளது. இந்த நிலையில், முப்பது இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட சீனப் படையைத் தாய்வான் மீது சீன அரசு ஏவிவிடுமா? சீன - அமெரிக்க சண்டை நிகழுமா என்பவையே இன்றைய வினாக்களாகும்.

சமபலம் கொண்ட இரண்டு உலக வல்லரசுகள் நேரடியான மோதலைத் தவிர்த்துவிட்டு, மறைமுகமான வழிகளில் இராணுவ மிரட்டல்களையும், புலனாய்வுச் சதிகளையும், பொருளாதாரப் பயமுறுத்தல்களையும் மற்றும் அரசியல் பிரச்சாரங்களையும் செய்து ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வது, பனிப்போரின் ஒரு முக்கிய அம்சமாகும்.

தாய்வான் விவகாரம் தொடர்பாக சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே இப்போது நடைபெறும் சொற்போர், முன்னைய பனிப்போர்க் காலத்து உதாரணங்களை நினைவூட்டுவதைத் தடுக்க முடியாதுள்ளது.

பழைய பனிப்போரின் சமாதி சோவியத் யூனியனில் உள்ளது என்றால், புதிய பனிப்போரின் கருவறை தாய்வானில் உள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது! O

## இமாலயப் பொய்யும்..,

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாததாயின் எதற்கு அதிகாரப்
பரவலாக்கம்? தமிழர் தாயகம்
என்றொன்று இல்லையானால்
எதற்கு அலகு பற்றிய அலட்டல்?
எனவே, இறுதியானதும்
தீர்க்கமானதுமான கேள்வி
எழுகின்றது. எதற்கு இந்தப்
போர்?

''இந்தப் போர்
தமிழின அழிப்பை
இலக்காகக்கொண்ட போர்.
சிங்களப் பேரினவாதத்தின் இந்த
இனப்போர்
நீண்ட நெடுங்காலமாக, புலிகள்
இயக்கத்தின் பிறப்பிற்கு
முன்னிருந்தே நிகழ்ந்து
வருகிறது'' என, விடையைத்
தலைவர் அவர்கள்
கூறிவிட்டார்கள். இப்போது
இம் மக்கள் மிகத் தெளிவாக
மனங்கொள்ளவேண்டிய செய்தி
இதுதான். இனிமேல்
நடக்கப்போகும் போர்,
இனப்படுகொலை ( genocide )
எனும் - சிங்களப் பேரினவாதத்தின்
இன அழிப்பின் இறுதி
வடிவமாகும். இந்த
இனப்படுகொலை உணர்வே
நீறுபூத்த நெருப்பாக- வரலாற்றில்
புதைந்து நிற்கும் வன்மமாக -
இனக்கலவரங்களின்போதும்
படுகொலை நிகழ்வுகளின்போதும்
வெளிப்பட்டது. இப்போதும்
மீண்டும் குமாரபுரத்தில்,
சாளம்பைக் குளத்தில்,
நாச்சிக்குடாவில் இவ்வுணர்வு
உயிர்ப்பிக்கப்படுகின்றது.
எனவே, அம்மையாரும் தேரர்களும்
''பணிந்து போ - அல்லது
அழிந்துபோ'' எனக் கூறத்
தொடங்கிவிட்டனர். இத்தகைய
நிலைமைகளின்போதே
ஜேர்மனியில் 60 இலட்சம்,
றுவாண்டாவில் 10 இலட்சம்,
பொஸ்னியாவில் 3 இலட்சம்,
திமோரில் இன்னும் தொடரும்
பல இலட்சம் மக்கள்
இனப்படுகொலையாகினர்.
ஆனால் இவ்வாறு படுகொலையான
யூதர்கட்கும், துட்சிகளுக்கும்,
முஸ்லிம்கட்கும், திமோரியருக்கும்,
தமிழீழத் தமிழர்க்கும் இடையே
பெரு வேறுபாடுண்டு; அதுதான்
இத்தகைய படுகொலையைத்
தடுக்கும் வாய்ப்பு - தமிழ்
மக்கட்கு வாய்த்திருக்கும்
வல்லமை. அந்த வல்லமை
தமிழ்த் தேசியத்தின் படையணி
என நாம் சொல்லத்
தேவையில்லை; ஆனால்,
அந்தப் படையணியைக்
கட்டியெழுப்பி எம்மின அழிவைத்
தடுக்கவேண்டிய பொறுப்பை
எம்மக்கள் மீது வரலாறு
சுமத்தியிருப்பதை. நாம்
சொல்லித்தான் ஆகவேண்டும்! O

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**